இதழ் 368
06 டிசம்பர் 2025
18 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1



விதுரன்

# டிற்வா சூறாவளி

## ஆளுகை தோல்வியும் அக்கினிப் பரீட்சையும்

**அனைத்துலக மனித உரிமைகள் நாள்**

**10.12.2025**

“நாளாந்த வாழ்வுக்கு இன்றியமையாதன மனித உரிமைகள்” என்னும் மையப் பொருளுடன் 2025ம் ஆண்டுக்கான அனைத்துலக மனித உரிமைகள் நாள் 10.12.2025 இல் ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்படுகிறது.

ஈழத்தமிழர்களாகிய நாமும் தாயகத்திலும் தமிழர் வாழும் உலக நாடுகளிலும் இந்த மையப் பொருளை முன்னிறுத்தி ஈழத் தமிழர்களின் மனித உரிமைகளை ஈழத் தமிழர் அடைவதற்கான செயற்திட்டங்களை அமைத்துப் செயற்படல் அவசியம் என்பதை இலக்கு ஈழத்தமிழர் கவனத்திற்கு இந்த அனைத்துலக மனித உரிமைகள் நாளில் கொண்டு வர விரும்புகிறது.

– ஆசிரியர் குழு –



மருதன் ராம்

# “டிற்வா” புயலும் மலையகத்தின் கண்ணீரும்:

## கடந்த கால அனர்த்தங்களிலிருந்து பாடங்கள்



# எமது நிலைப்பாட்டை ஈழத்தமிழ் இனம் கூட்டாக வலியுறுத்தவேண்டும்

வேல்ஸில் இருந்து **அருஸ்**



© 2025 இலக்கு இணையம்

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட நிவாரணங்கள் அறிவிப்பு

இலங்கையில் ஏற்பட்ட பேரிடரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது வீடுகளுக்கு தேவையான அத்தியாவசியமான பொருட்களை கொள்வனவு செய்ய ரூ. 50 ஆயிரம் வழங்கப்படுமென ஜனாதிபதி பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனர்த்தங்களால் பாதிப்புற்று, முகாம்களில் தங்கியிருக்கின்ற குடும்பங்கள், அதில்தங்கியிருக்கவிருப்பமில்லை எனின், 3 மாதங்களுக்கு மாதாந்தம் தலா ரூ. 25,000 கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், அனர்த்தத்தினால் நெல், சோளம் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு 150,000



ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அத்துடன் பேரிடர் காரணமாக 5,165 வீடுகள் அழிக்கப்பட்டதாகவும், 55,747 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக வும், 1.7 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலினால் உருவாக்கப்பட்ட துணை இராணுவக்குழுவின் தலைவர் பலி



இஸ்ரேலிய ஆதரவுடன்-ஹமாஸுக்கு மாற்றாக தன்னைக் காட்ட முயன்ற காசா போராளிக் குழுத் தலைவர் யாசர் அபு ஷபாப் கொல்லப்பட்டது, அவரது மக்கள் படைகள் குழுவாலும் இஸ்ரேலிய ஊடகங்களா லும் உறுதிப்படுத்தப் பட்டது.

தெற்கு காசாவின் பெடோயின் தாராபின் பழங்குடியினத்தைச் சேர்ந்த அபு ஷபாப், கடந்த ஆண்டு ஒரு போராளிக்குழுவின் தலைவராக உருவாகும் வரை பாலஸ்தீனப் பகுதியில் பெரும்பாலும் அறியப்பட வில்லை. ஆரம்பத்தில் "பயங்கர வாத எதிர்ப்பு சேவை" என்று அழைக்கப்பட்டது, இந்த ஆண்டு மே மாதத்திற்குள் அது தன்னை "மக்கள் படைகள்" என்று பிரபலப்படுத்தியது, அது இஸ்ரேலிய கட்டுப்பாட்டில் உள்ள காசாவின் பகுதிகளில் செயல்படும் குறைந்தது 100 போராளிகளைக் கொண்ட நன்கு ஆயுதம் ஏந்திய குழு.

இந்த ஹமாஸை எதிர்த்துப் போராடுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தேசியவாத பாலஸ்தீனக்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

## டிசம்பர் 9, 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் மழை அதிகரிக்கும்!



இலங்கையில் நிலவும் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி வானிலை காரணமாக டிசம்பர் மாதம் 9, 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது காற்றின் வேகமும் அதிகரிக்கும் என அதன் பணிப்பாளர் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இடைப் பருவப்பெயர்ச்சி வானிலையுடன் ஒப்பிடுகையில் வடகிழக்கு பருவப்பெயர்ச்சியின் போது இடியுடன் கூடிய மழை குறைவானதாகவே இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இந்த வடகிழக்கு பருவப்பெயர்ச்சி தீவிரமடைவதன் காரணமாக டிசம்பர் ஒன்பதாம் திகதிக்குப் பின்னர் மழைவீழ்ச்சி அதிகரிக்கக்கூடும் என்பதோடு, எந்நேரத்திலும் இப்பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் ஏனைய மாகாணங்களில், குறிப்பாகத் தென்மேற்குப் பகுதியில் இக்காலப்பகுதியில் இடியுடன் கூடிய மழை இல்லா விட்டாலும் மழை பெய்யக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்குத் தென்கிழக்குத் திசையில் வளிமண்டலத் தளம்பல் நிலை காணப்படுவதாகவும், ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை இந்நிலை நீடிக்கக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள இந்தத் தளம்பல்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

## ஆப்கானில் அமெரிக்கா இழந்த 29 பில்லியன் டொலர்கள்

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற மோசடி மற்றும் தவறான நிர்வாகத்தால் 29 பில்லியன் டொலர்கள் வரை இழப்பு ஏற்பட்டதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா வீண்செலவு செய்தது இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தபோது தவறான நிர்வாகம் மற்றும் தவறான நடத்தை காரணமாக 29 பில்லியன் டொலர்கள் வரை இழந்தது, இவை அனைத்தும் நாட்டில் நம்பிக்கையி




ல்லாத கொள்கைகளை நோக்கி நகர்ந்தபோது ஏற்பட்டது என்று அரசாங்க கண்காணிப் புக் குழுவின் புதிய அறிக்கை தெரிவிக் கிறது.

இந்த நிதி முறைகேடுகளில்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## யூரோவிஷனை புறக்கணித்த ஐரோப்பிய நாடுகள்

அடுத்த யூரோவிஷன் பாடல் போட்டியில் இஸ்ரேல் பங்கேற்க அனுமதிக்கப்பட்டதை அடுத்து, அதனை புறக்கணிப்பதாக



ஸ்பெயின், அயர்லாந்து, ஸ்லோவேனியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன. இந்த ஆண்டின் தொடக்கத்தில், வாக்கு மோசடி மற்றும் காசாவில் நடந்த போர் தொடர்பாக இஸ்ரேலைத் தடை செய்யுமாறு பல ஒளிபரப்பாளர்கள் போட்டி ஏற்பாட்டாளர்களை ஐரோப்பிய ஒளிபரப்பு ஒன்றியம் (EBU) வலியுறுத்தி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## அரசின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 157 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதற்கு ஆதரவாக 158 வாக்குகளும் எதிராக 01 வாக்கும் கிடைத்தது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. எதிர்த்து வாக்களித்தார்.


2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்



டாம் வாசிப்பு அல்லது வரவு செலவுத் திட்ட உரையை கடந்த நவம்பர் 7 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் பூட்டீன் ஆரம்பித்துள்ள புதிய தொலைக்காட்சி

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் ரஸ்ய ருடே என்ற புதிய தொலைக்காட்சி சேவையை இந்தியாவின் வெள்ளிக்கிழமை(5) ஆரம்பித்து வைத்துள்ளார். இது மற்றொரு தொலைக்காட்சி சேவையின் தொடக்கமாக இருக்காது, உலக ஊடகங்கள் இந்தியாவை எப்படிப் பார்க்கின்றன என்பதில் இது ஒரு மைல்கல்லாக இருக்கும் என இந்திய தரப்பு தெரிவித்துள்ளது.



இந்த வெளியீட்டிற்கான பணி பல மாதங்களாக நடந்து வந்திருந்தது. கடந்த இரண்டு வாரங்களாக, இந்திய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## எதிர்க்கட்சிகள் எதிர்க்கட்சிகளாக இயற்கை அனர்த்தங்களில் செயற்படக்கூடாது

**பா. அரியநேத்திரன்**

இலங்கையில் கடந்த வாரம் நடந்த மிக மோசமான இயற்கை அனர்த்தமானது இலங்கையில் 24, மாவட்டங்களை பாதித்தது என்பது உண்மை.



அதிலும் மலையகம், தென்பகுதிகளில் கடுமையான வெள்ளம் புயல்காற்றால் உயிர்சேதங்களும் பொருளாதார அழிவுகளும் ஏற்பட்டன.

இயற்கை அழிவுகள் புவியியல் மாற்றம் வானிலை மாற்றத்தால் எதிர்பாராமல் ஏற்படுவது அதன் அழிவுகளில் இருந்து மக்கள் பாதுகாக்கப்படுவதற்கான முன் ஆயத்தங்களை ஆட்சியில் உள்ள ஆழும் தரப்பு, எதிர் தரப்பு, அரசசார்பற்ற அமைப்புகள்,உள்ளூர் சமூக அமைப்புகள் அனைவரும் அரசியல் வேறுபாடுகளை புறம்தள்ளி மேற்கொள்ளவேண்டும்.

தமிழில் ஒரு பழமொழி உண்டு "வெள்ளம் வரு முன் அணைகட்டவேண்டும்" இதன் அர்த்தம் ஒரு இடத்தில் வீடு, வளவு, பொது இடம் மழைநீரால் அல்லது குளத்து நீரால் வெள்ளம் வரும் பாதை(வழி) தெரிந்தால் அந்த நீர் உள்ளே வராமல் அணைகட்டிவிடுவது .

இந்தப்பழமொழி மூலம் இயற்கை அனர்த்தம் மூலமாக பாதிப்பு வரும் என கண்டால் அந்த இடத்தில் இருந்து மக்களை பாதுகாப்பாக முன்கூட்டியே பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச்செல்லுதல் அனர்த்தம் முடிவுற்றதும் திருப்பி மக்களை அங்கே குடியமர்த்தல் என்பதை குறிக்கும்.

இதனை ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் முற்கூட்டி கவனம் செலுத்தவேண்டும் அப்படி கவனம் செலுத்தி மக்களை வெளியேற்றியிருந்தால் பல உயிரிழப்புக்களை தவிர்த்திருக்கலாம் என்பது உண்மை. அதனை செய்யத்தவறியது அநுர ஆட்சியாளர்களுடைய தவறுதான்

இயற்கை அனர்த்தத்தின் வேகம் மழைவீழ்ச்சி அளவு புயல் சூறாவளி என்பன எந்த வேகத்தில் ஏற் படும் என்பதை எவரும் எதிர்பார்க்கமுடியாது.

தற்போது கடந்த மாதம் 2025, நவம்பர், 27, தொடக்கம்,30, வரை இடம்பெற்ற புயல், மழை, வெள்ளம் என்பன ஏற்படுவதற்கு முன்னர் வானிலை ஆராய்ச்சி நிலையத்தால் கூறப்பட்ட எதிர்வு கூறல்களை கேட்டு சில இடங்களில் மக்களை பாதுகாப்பாக தாழ் நிலங்களில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றினாலும் பல இடங்களில் மக்கள் வெளியேறவில்லை, அல்லது வெளியேற்றப்படவில்லை என்பது உண்மை. சில வேளைகளில் வானிலை அறிக்கையில் கூறப்படுவது நடைபெறாமல் போன சம்பவங்கள் பல உண்டு.

இப்போதுஇயற்கைஅனர்த்தம்ஏற்பட்டுவிட்டது இதனில் இருந்து மீளுவது எப்படி என்பதையே அனைவரும் சிந்திக்கவேண்டும். இலங்கையில் ஆளும் தரப்பு கட்சியாக ஒரு கட்சி தேசிய மக்கள் சக்தியில் 159 ஆசனங்களும், எதிர்கட்சிகளாக 10, கட்சிகளை பிரதிநித்துவம் செய்யும் 66 ஆசனங்களும் உள்ளடக்கிய 225, பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

ஆனால் இலங்கை அரசியலில் ஒரு பழக்கம் உண்டு ஆட்சி செய்பவர்கள் ஆளும்தரப்பாக இருந்தால் எதிர்கட்சிகளாக உள்ளவர்கள் ஆளும்தரப்பை குறை கூறி எதிரிக்கட்சிகளாக பார்க்கப்படும் கலாசாரம் 1948, தொடக்கம் 2025, இன்றுவரையும் உள்ளது.

கடந்த வாரம் இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட அழிவை எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலர் அதனை ஆளும் தரப்பு செய்த "மனிதப்படுகொலை" என பாராளுமன்றில்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்

## இயற்கையின் பேரிடருக்கு மத்தியிலும் மாற்றமின்றித் தொடர்கிறது ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கமும் ஈழநிலஅபகரிப்பும்

சிறிலங்கா அரசத்தலைவர் டித்வா சூறாவளிப் பேரிடரை எதிர்கொண்டு அனைவரும் ஒன்றாகப் பயணித்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என நாட்டு மக்களுக்கு உரையாற்றுகின்றார். ஆனால் அதே நேரத்தில் அவர் நாட்டு மக்களாகக் கூறிக்கொள்ளும் ஈழத்தமிழர்களை அவரின் பொலிசாரே பெண்கள் என்றும் பாராது அடித்து உதைத்து அனைவரும் ஒன்றாகப் பயணிக்க நாங்கள் விடமாட்டோம் என்று தையிட்டியில் நிரூபித்துள்ளனர். பௌத்தர்கள் அமைதிநாளாகக் கொண்டாடும் முழுநிலவு நாளிலேயே புத்தருக்கு எதிரிலேயே நிலைநிறுத்தியுள்ளமைக்கு அரசத்தலைவர் அநுரகுமர திசநாயக்க எவ்வாறு நீதி வழங்கப் போகிறார் என்பதிலேயே அனைவரும் ஒன்றாகப் பயணித்து நாட்டை மனிதநேய அடிப்படையில் கட்டியெழுப்புவதும் நடைமுறைச்சாத்தியமாகும் என்பதே இலக்கின் கருத்தாக உள்ளது.

தையிட்டியில் இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற மக்கள் இறைமையை ஒடுக்கி மக்களின் நிலத்தை அபகரித்து மக்களின் நிலத்தில் அடாவடித்தனமாகப் படைபல உதவியுடன் கட்டப்பட்டுள்ள விகாரைக்கு எதிராக மக்கள் அமைதியான முறையில் கடந்த மூன்றாண்டுகளாக மாதத்தின் ஒவ்வொரு முழுநிலவுநாளிலும் நடாத்தும் தங்கள் நிலத்தைத் தங்களிடம் மீளக்கையளித்து தங்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்யமாறு சிறிலங்கா அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்து அமைதியாகச் சிறிலங்காவின் அரசியலமைப்புச் சட்டத்தை மீறாது போக்குவரத்துக்குப் பாதை விட்டு வீதி ஓரத்தில் யாருக்கும் எந்தப் பாதிப்பும் வராதவாறு நடத்தும் மக்கள் போராட்டத் தொடரில் 04.12.2025இல் காரணமின்றி வலிந்து புகுந்து சிறிலங்காவின் நீதிமன்றம் பொலிசாரின் தலையீட்டை இவ்விடயத்தில் ஏற்கனவே கண்டித்திருந்த நிலையிலும் பங்குபற்றியவர்கள் தங்களைக் காலநிலையில் இருந்து பாதுகாக்க அமைத்திருந்த கூடாரச் சீலைகளை வன்முறையாகப் பறித்தெறிந்து அதனைச் செய்யவேண்டாமெனக் கோரிய பெண்களை ஆண் பொலிசார் அடித்துத் தாக்கிய இனவெறி மதவெறி நிகழ்வு பதிவாகியுள்ளது.

அடிப்படை மனித உரிமைகளான கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பவற்றை மறுத்து ஈழத்தமிழரின் தங்களின் உடமைகளைப் பாதுகாக்கும் அடிப்படை உரிமையை வன்முறையாகத் தடுத்து ஈழத்தமிழ் மக்களின் சனநாயகப் பங்களிப்பையும் நிராகரித்துள்ளனர். இதன் வழி ஈழத்தமிழர்களின் இறைமை ஒடுக்கத்தை சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் நடைமுறைப்படுத்திய சிறிலங்காப் பொலிசார் சிங்கள பௌத்தர்களின் படைபல ஆதரவுடனான நில அபகரிப்பு தையிட்டி விகாரை நிறுவுதல் என்னும் ஈழத்தமிழினத்தின் மேலான பண்பாட்டு அழிப்புக்கான சிறிலங்கா அரசாங்கத்தின் அரசியல் செயற்திட்டம் என்பதை இயற்கையின் பேரிடருக்கு மத்தியிலும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் மேலான இனஅழிப்பு நோக்குப் பண்பாட்டு இனஅழிப்பு நோக்குக் கொண்ட விடயங்களை ஈழத்தமிழர்களின் ஊடகங்கள் எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் ஊடகங்கள் கூட முக்கிய செய்திகளாக வெளிக்கொண்டுவராது மௌனிக்கின்ற கேவலமான ஊடகப்பண்பை இலக்கு வன்மையாகக் கண்டிக்கிறது. நடைபெறும் ஈழத்தமிழின அழிப்பை பொறுப்புடன் வெளிப்படுத்தி அதனை நீக்குவதை நிபந்தனையாக வைத்து சிறிலங்கா அரசுடன் உரையாடல்களைச் செய்ய வேண்டிய உலகத் தமிழர் அமைப்பினர் அதனை விடுத்து பேரிடரில் ஆளும் அரசுக்கு உதவித் தாம் தமக்கான நன்மைகளைப் பெறக் குழு அமைக்கும் கேலமான போக்கையும் உலகு காண்கிறது. அவ்வாறே வெகுசனப் போராட்டங்கள் நடைபெறுகின்ற பொழுது அதில் தாங்கள் கலந்து கொள்ளாது தாயகத்திலும், அவற்றைத் தாங்கள் அனைத்துலக மயப்படுத்தாது அனைத்துலக நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்கள் வாழ்ந்து தாயகக் கடமையைச் செய்யாது விடுவதாலேயே வெகுசனப்போராட்டங்களில் பங்குபற்றுபவர்களை சிறிலங்காப் படையினர் தாங்கள் நினைத்த மாதிரி நடத்துகிறார்கள் என்ற வேதனையான உண்மையை இனியாவது அனைத்து ஈழத்தமிழரும் இதனை உணர்ந்து விருப்பு வெறுப்புக்களைக் கடந்து ஈழத்தமிழர்களின் நீதியின் குரலாகச் செயற்பட வேண்டுமென்பது இலக்கின் எதிர்பார்ப்பாக உளள்து.

பேரிடர் மீள் கட்டுமானம் இன்று ஒவ்வொரு ஈழத்தமிழராலும் தாயகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நேரத்தில் ஊகங்களின் அடிப்படையில் எதனையும் செய்யாது அறிவார்ந்த முறையில் சிறந்த தொழில்நுட்பத் தெரிவின் வழி அவற்றைச் செய்விக்க வேண்டியது புலத்தில் உள்ள ஈழத்தமிழர்களின் கடமையாகிறது. நடந்ததை இழப்பாக கருதாது இருப்பதை அத்திவாரமாகக் கொண்டெழுதல் எந்த இழப்பின் இடையிலும் மீள்திறன் கொண்டெழுவதற்கு அவசியம். இதனைப் பொருளாதாரமே அரசியலை நிர்ணயிக்கும் நிலையில் பொருளாதாரத்தின் ஆணிவேரான பயிர்ச்செய்கையிலும் நடைமுறைச் சாத்தியமாக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஈழத்தமிழர் தாயகத்தில் இயற்கைப் பேரிடரில் ஈழத்தமிழர்கள் மீள்திறன் கொண்டெழப் போராடிக்கொண்டிருக்கும் நேரத்தில் உணவினதும் மனிதநேயத்தினதும் புதிய தொடக்கம் (Regenesis) என்னும் நூலின் ஆசிரியரான பிரித்தானியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஜோர்ஜ் மொன்பியோ (George Monbiot) அவர்கள், பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழான த கார்டியன்" 05.12.2025 பத்திரிகையில் "ஒக்ஸ்வேர்ட்டில் ஒரு குடி குடித்தவாறு வேளாண்மை புதிய ஏற்பாட்டை தரும் பாத்திரமாகவே என்றும் உள்ள அதிசயம் கண்டு வியப்பால் தடுமாறாலாம்" "Over a pint in Oxford, we may have stumbled upon the holy grail of Agriculture" என்னும் இயற்கை அறிவியல் கட்டுரையை எழுதியுள்ளார். இதனை சவுத் ஒக்ஸ்வேர்ட்செயரில் விட்சேர்ச் – ஒன்– தேம்ஸில் இயற்கை முறையில் இயற்கைக்கு எந்தப்பாதிப்பையும் விளைவிக்காது உரங்களோ களைக்கொல்லிகளோ பூச்சி நாசினிகளோ பயன்படுத்தாது பயிர்ச்செய்கையைச் செய்வதை ஊக்குவிக்கும் பண்ணையை நடாத்தி வரும் இயற்கை பயிர்ச்செய்கை நிபுணரான டொலி எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இயன் டொல்கர்ஸ்ட் ( Ian Tolhurst) அவர்கள் உடன் இணைந்து அனுபவப்பட்டு எழுதிய அவர் நில அதிர்ச்சியியலைப் ( Sesimology) பயன்படுத்தி நிலத்துக்கு கீழ் உலகெங்கும் கேபில் குழாய்கள் பதிக்கப்பட்டதால் விளையும் கதிர்வீச்சையே பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கக் கூடிய முறையில் மண்ணை ஈரப்படுத்தி அதில் உள்ள நுண்ணுயிர்களைக் கொண்டே பயிருக்கான ஊட்டச்சத்தை வழங்கி மண்ணின் மீள்தன்மையை மீட்டு குறைந்த செலவில் இயற்கை முறையில் உச்ச விளைச்சலைப்பெறலாம் என்னும் உண்மையை மீளுறுதிப்படுத்தியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவால் தன்னியக்கத்தன்மையுள்ள ஆயுதங்களாக மாற்றப்பட்டு வரும் ட்ரோன்களால் வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளாலும் எந்த நாட்டின் வானையும் கடலையும் மண்ணையும் கட்டுப்படுத்தித் தங்களின் பாதுகாப்பு தங்களின் பணப்பெருக்கம் என்பவற்றுக்கு உலக நாடுகள் எதனையும் வலுக்கட்டாயப்படுத்தக் கூடிய புதிய உலக அரசியல் முறைமையை நடைமுறைப்படுத்தி உள்ள நிலையில் காலநிலை சீர்கேடுகளுடனும் போரச்சத்துடனும் தான் ஒவ்வொருநாடும் நாளாந்த வாழ்வை எதிர்கொள்ள வேண்டியதாகியுள்ளது. இவற்றை ஓரளவு தமக்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொள்ளவே கடந்த வாரம் ரஸ்ய அதிபர் புடின் மோடியுடன் உடன்படிக்கை கைச்சாத்திட இந்தியா வந்தார்.

பிரான்சின் அதிபர் மக்ரோன் ஜியுடன் உடன்படிக்கை கைச்சாத்திட சீனா சென்றார். ட்ரம்ப்புக்கு உலக உதைபந்தாட்ட சங்கமான பிவ்வா அதன் அமைதிக்கான பரிசை வழங்கி 96 ஆண்டுகளில் முதன்முறையாக 48 அணியினர் உடன் 2026ம் ஆண்டுக்கான போட்டிகள் நிர்ணய இழுப்பை நடத்தி ட்ரம்பின் காசா – உக்ரேன் அமைதி முயற்சிகளுக்கு அங்கீகாரத்தை வழங்கியது. ஆயினும் மக்கள் உறுதியுடன் மக்கள் இறைமையைப் பேணுவர் என்பதற்கு உதாரணமாக உக்ரேன் எந்த எல்லை இழப்பையும் அனுமதிக்க மாட்டோமென்றும் பலஸ்தீனியர்கள் மண்ணை விட்டுக்கொடுக்க மாட்டோடிமன்றும் உறுதியாக உள்ளனர். இவ்வாறு மக்கள் இறைமை கருத்தில் எடுக்கப்படாது வல்லாண்மைகள் மேலாண்மைகள் வழி போருடனான அமைதி என்று முள்ளிவாய்க்காலில் உலகநாடுகள் தொடங்கிய புதிய முறைமை உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறையாகவே மாறிய நிலையில் வாழ்கின்ற மனிதர்கள் காலநிலைச் சீர்கேடுகளையும் போரச்சத்தின் அல்லது போரின் விளைவுகளையும் நாளாந்த வாழ்வின் ஒரு அங்கமாக ஏற்று அதற்கு நடுவில் தங்கள் மண்ணையும் பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளர்ச்சிகளையும் கட்டமைத்தேயாக வேண்டிய தேவை தோன்றிவிட்டது. இதற்கு ஈழத்தமிழர்களும் விதிவிலக்கல்ல. இந்த மண் எங்களின் சொந்த மண் என்பதை முதன்மைப்படுத்தி ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் ஒருமைப்பாட்டுடன் இருப்பதைக் கொண்டு அனைத்தையும் மீளப்பெறும் உறுதியான பயணத்தை தமிழர் ஒருங்கிணைப்பால் தொடருவோம் என இனியொரு விதி செய்வோம் என அழைக்கிறது இலக்கு.

**ஆசிரியர்**



# டிற்வா சூறாவளி

# ஆளுகை தோல்வியும் அக்கினிப் பரீட்சையும்

விதுரன்

‘டிற்வா’ சூறாவளி கோரதாண்டவமாடி விட்டுச் சென்றிருக்கின்றது. தற்போது வரையிலான தகவல்களின்படி 611பேர் உயிரிழந்துள்ளதோடு 213 காணமல்போயுள்ளனர். இந்த எண்ணிக்கை அடுத்துவரும் நாட்களில் அதிகரிக்கலாம்.



அப்படியிருக்கையில் இலங்கையில் முறைப்படியான அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பு இருப்பதாக கூறப்படுகின்றபோதிலும், தித்வா சூறாவளியின் தாக்கம், குறைந்தது பங்களாதேஸ், இந்தியா, பிலிப்பைன்ஸ் அல்லது ஜப்பான் போன்ற நாடுகள் பின்பற்றும் தேசிய அனர்த்த முகாமை தயார் நிலையுடன் ஒப்பிடுகையில் இலங்கை எந்தளவுக்குப் பின்தங்கியுள்ளது என்பதை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

மூன்று தசாப்த உள்நாட்டுப் போர், 2004 ஆழிப்பேரலை, 2019ஈஸ்டர் தாக்குதல்கள், 2020 கொரோனா மற்றும் பொருளாதார வங்குரோத்து, அதன் நீட்சியான அரசியல் குழப்பம் ஆகியவற்றைச் சந்தித்துள்ள தேசத்திற்கு பேரிடியாக அமைந்திருக்கின்றது.

5ஆம் திகதி நவம்பர் மாதம் 2025 அன்றே தித்வா சூறாவளியின் நகர்வுப்பாதை கண்டறியப்பட்டு அதன் ‘வலு’ கணிக்கப்பட்டும் அதுபற்றிய ‘புறக்கணிக்கப்பட்ட’ செயற்பாடுகள் இலங்கைக்கு நிச்சயமற்ற எதிர்காலத்தை தோற்றுவித்துள்ளதோடு தீர்க்கமான தருணமாகவும் மாறியுள்ளது.



ஒரு தீவு தேசமாக காலநிலை அபாயங்கள் குறித்துவிழிப்புடன்இருக்கவேண்டியதுஅவசியமாக இருக்கின்றபோதும் அதிகாரப்போராட்டங்கள் நாட்பட்ட தவறான முகாமைத்துவம் ஆகியவற்றால் தொடரும் புறக்கணிப்புக்கள் இந்த அவல நிலைமையை உருவாக்கியுள்ளது என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இதில், வடக்கிலும், கிழக்கிலும் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களுக்கு மிகப்பெரும் காரணமாக இருப்பது, அனர்த்தம் பற்றிய முன்னெச்சரிக்கையில் தமிழ் மொழி தொடர்ச்சியாக புறக்கணிப்படுவதாகும்.

அதுமட்டுமன்றி, பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா போன்றவர்கள் சுயமாக ஆராய்ந்து வெளியிடுகின்ற தகவல்களை வடக்கிலும்,கிழக்கிலும் இருக்கும் அரச அதிகாரிகள் எள்ளளவும் பொருட்டாக கொள்வதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.



கடுங்கன்னாவ நிலச்சரிவு போன்ற சம்பவங்கள், சட்டவிரோத கட்டுமானங்கள், மற்றும் காடழிப்புஆகியவற்றால்ஏற்படும்அபாயத்தையும் கடல் மட்டம் உயர்வடைதல் அனர்த்தங்களின் தீவிரத்தினையும் மேலும் அதிகரித்துள்ள நிலையில் மோசமான முகாமைத்துவத்தினால் ஏற்பட்டுள்ள துயரம் பல்வேறு கேள்விகளைத் தொடுத்துள்ளது. அதுமட்டுமன்றி அண்மைய நாட்களில் நடைபெறுகின்ற கூட்டங்களும் அறிவிப்புக்களும் அனர்த்த முகாமைத்துவத்தில் அரசாங்கக் கட்டமைப்புகளின் செயற்றிறன் இன்மை தெளிவாகிறது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்கூட்டிய எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதைத் தெரிவித்த அத்திணைக்களத்தின் பணிப்பாளர் அதுல கருணாநாயக்கவை, நேரடியாக அழைத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ‘அரசாங்கத்துக்கு களங்கம் விளைவிக்கக்கூடாது எனக்கூறி அவரை மௌனமாக்கியுள்ளார்.

அநுரகுமாரவின் இந்தச் செயற்பாடு தகவல் வெளிப்படைத் தன்மையின்மை அதியுச்ச அரசியல் தலையீட்டைக் காண்பிப்பதற்கு அப்பால் நிறைவேற்றதிகாரம் பலவீனங்களை மறைப்பதற்கு சர்வாதிகாரமாக உருவெடுப்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

இதைவிட முக்கியமாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுகிறது. அப்படியிருந்தும் வினைத்திறனாக செயற்பட்டிருக்க முடிந்திருக்கவில்லை. அதற்கு காரணங்கள் உள்ளன.

பாதுகாப்பு கட்டமைப்புக்கள் அனைத்தும் தமிழர்களை மையப்படுத்திய தவறான மூலோபாயத்துடன் தான் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றுக்கு அனர்த்தங்களை விடவும் தமிழர்களின் அடக்குமுறைக்குத் தான் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது ஊட்டி வளர்க்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இராணுவத்தின் காலாட்படைப் பிரிவுகளில் 75சதவீதமானவை வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்டிருப்பதால், மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் பேரிடர் ஏற்படுகின்றபோது, மீட்புப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு போதிய படையினர் இருக்கவில்லை.

அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற வெளிநாடுகளில் இருந்து மீட்புக் குழுக்கள் வர வேண்டிய கையறுநிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்திற்கு வடக்கு,கிழக்கை மையப்படுத்திய படைநிலைப்படுத்தல் மூலோபாயத்தை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனென்றால் அடுத்துவரும் நாட்களில் பொருட்களின் விலை உயர்வு, தட்டுப்பாடு போன்ற காரணங்களால் மக்கள் மத்தியில் இயல்பான பதற்றம் ஏற்படும் சூழல் உருவாகும் போது, அதை முறையாகக் கையாளத் தவறினால், அது கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் ஏற்பட்ட நெருக்கடியை தோற்றுவிப்பதற்கு தாமதமாகப்போவதில்லை.



அரசாங்கம் அந்த நெருப்பாற்றைக் கடக்க வேண்டுமானால், இனவாதச் சிந்தனையுடனான பாதுகாப்பு மூலோபாயத்தை முதலில் கைவிட வேண்டும். பேரிடர் முகாமைத்துவத்தை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். அனர்த்த முகாமையை தேசிய முன்னுரிமையாகக் கருதி, அனைத்துத் தரப்பினருடனும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது சூறாவளி அனர்த்தங்களால் ஏற்பட்டுள்ள கடினமான சூழலை வெற்றிகரமாகக் கையாள்வது, நீண்டகால ஆட்சிக் கனவுடன் வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு அக்கினிப் பரீட்சையாக மாறியுள்ளது.

அனர்த்தங்கள் பற்றிய ஆரம்ப மதிப்பீடுகளின்படி, கிட்டத்தட்ட 320 பில்லியன் ரூபா வரை அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் உட்கட்டமைப்பு சேதங்கள், உற்பத்தி இழப்புகள் (110 பில்லியன் ரூபா), மற்றும் விவசாய அழிவுகள் (50 பில்லியன்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# டிற்வா புயல் ஏற்படுத்திய அழிவுகள்...



கிண்ணியான்

இலங்கையைத் தாக்கிய டித்வா புயல் அதனால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு போன்ற பேரிடர்களால் மிக மோசமாக நாடு பாதிக்கப்பட்ட நிலையில் நூற்றுக்கணக்கான உயிர்களும் காவு கொள்ளப்பட்டன. வடகிழக்கு மாகாணங்கள் உட்பட பல மாவட்டங்களிலும் இந்த பாதிப்பினை மக்கள் எதிர்கொண்டார்கள். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்த அனர்த்தம் காரணமாக திருகோணமலை மாவட்டமும் பாரிய இழப்புக்களை சந்தித்தது.



மொத்தமாக நாடு பூராகவும் இது வரைக்கும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையின் பிரகாரம் 519,842 குடும்பங்களை சேர்ந்த 1,844,055 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 607 நபர்கள் உயிரிழந்துள் ளனர். 341 நபர்கள் காணாமல் போயுள்ளதுடன் முழுமையாக முழுமையாக 5000க்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.



இவ்வாறான நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, வெருகல் உள்ளிட்ட பல பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய மாவட்டத்தின் 25,865 குடும்பங்களை சேர்ந்த 86,173 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு அணைக்கட்டு உடைப்பெடுப்பு, மகாவலி கங்கையின் நீர் பெருக்கம் காரணமாகவும் கனமழை மற்றும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் பெருமளவான பாதிப்புக்கள் ஏற்பட்டன.

இவ்வாறான பேரிடர் தொடர்பில் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய செவ்வியில், இயல்புக்கு மீறிய பெருவெள்ளத்திற்கு இலங்கையின் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு புதுமையானதும் தனித்துவமானதுமான டித்வா புயலினுடைய நகர்வு அது கொண்டு வந்து சேர்த்த அதிகளவான ஈரப்பதனுமே பெருவெள்ளத்துக்கான காரணமாக இருக்கிறது. இன்னமும் சிறப்பாக சொல்வதானால் வழமையாக ஒரு புயல் நகருகின்ற போது மிக அதிகமான மழை வீழ்ச்சி கிடைக்கும் ஆனால் இம்முறை இலங்கையின் வெள்ளப்பெருக்கு நிகழ்வுக்கு மிகப் பிரதானமான காரணியாக டித்வா புயலானது இலங்கையின் தென்பகுதி ஊடாக நகர்ந்து வடபகுதிக்கு சென்றமை மிக முக்கியமான விடயம். இதில் சிறப்பாக புயலின் நகர்வின் போது உள்வலயத்தின் ஒரு பகுதியில் வெளி வலயத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியும் நீர்ப்பரப்புக்குள் இருந்தமையினால் அதிகளவிலான ஈரப்பதனை உள்வாங்கி அதிக மழை வீழ்ச்சி இலங்கைக்கு கிடைத்ததே வெள்ளப் பெருக்கிற்கான மிகப் பிரதானமான காரணம்.

அதே நேரம் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட தரப்பினரை மட்டும்தான் அது சென்றடைந்தது. ஏனைய தரப்பினர்களுக்கு முழுமையாக புயல் என்ற விடயங்கள் தெரிவதற்கு முன்னர் புயல் கிட்டத்தட்ட அதிகப் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் கடுமையான உயிரிழப்புக்களுக்கான மிகப் பிரதானமான காரணம் புயல் மழையோடு சேர்ந்ததான நிலச்சரிவு நிகழ்வுகளுமே. இலங்கையில் இந்த புயலினால் உயிரிழந்தோரில் கிட்டத்தட்ட 85 வீதமானோர் மண் சரிவுக்குள் அகப்பட்டு இறந்தவர்களே. ஆகவே புயலோடு இணைந்ததான முன்னறிவிப்புகள் இருந்தாலும் கூட மண்சரிவுகள் பற்றிய முன் அறிவிப்புகள் மக்களை போதுமானளவுக்கு சென்றடையாமையே அதிகளவிலான இறப்பிற்கு பிரதான காரணம்.

மட்டக்களப்புக்கும் கணிசமான அளவு பாதிப்புக்கள் இருந்தது. ஆனாலும் மட்டக்களப்பிற்கு குறிப்பிட்ட நாட்களிற்கு பின்னர்மழை படிப்படியாக குறைவடைந்திருந்தது. குளங்கள் ஓரளவு கொள்ளளவு நிரம்பியதன் பின்னர் உன்னிச்சை குளம், உருகாமம் குளம் போன்ற வற்றின் மேலதிக நீர் வெளியேற்றப்பட்டதுடன் ஆற்று முகத்துவாரத்தை சேர்ந்த பெருமளவான நீர் முகத்துவாரங்கள் வெட்டப்பட்டு கடலுக்குள் விடப்பட்டதால் மட்டக்களப்பினுடைய வெள்ள அனர்த்தம் நிகழ்ந்தாலும் பாதிப்புக்கள் குறைவாக இருந்தது. ஆனால் திருகோணமலை, மூதூர், கிண்ணியா பிரதேசங்களினுடைய வெள்ள அனர்த்தங்களுக்கான மிகப் பிரதானமான காரணியாக மாவிலாற்றினுடைய உடைவை குறிப்பிடலாம். அத்தோடு மிகக் கன மழை கிடைத்தமையும் மாவிலாறு போன்ற ஆறுகளின் உடைப்பும் அதிகளவான பாதிப்புக்கள் திருகோணமலைக்கு ஏற்பட்டிருந்தது.

அதிகளவான குளங்கள் மிகச் சரியான வடிகாலமைப்பு இல்லாமல் காணப்பட்டாலும் மிகப் பெரிய மழை வீழ்ச்சி கிடைத்தமை ஒரு மிகப் பிரதானமான காரணமாக குறிப்பிடலாம். பல பிரதேசங்களில் மிகக் கனமழை கிடைத்து அதிகளவான நீர் கடலையும் சென்றடையாமல் நிலப்பகுதியில் தேங்கியமையினாலும், உண்மை யில் அந்த நிலப்பரப்பில் தேங்கிய நீரை கொள்ள ளவுக்கு ஏற்ற முறையில் வடிகால்கள் மற்றும் குளங்கள் இல்லாமையும் ஒரு காரண



மாக குறிப்பிடலாம்.

ஆனாலும் பொதுவாகவே இது போன்ற மிகத் தீவிரமான வானிலை அனர்த்தமொன்றின் போது இத்தகைய நிலமைகள் ஏற்படுவது இயல்பானது. ஆகவே வெள்ள அனர்த்தத்திற்கான மிகப் பிரதானமான காரணம் மிகக் குறுகிய காலத்தில் கிடைத்த மிக பெரியளவிலான மழை வீழ்ச்சியே.

அதிலும் இலங்கை முழுவதும் பரவலாக தொடர்ச்சியாக மிக மிக கனமழை கிடைத்தமையே வெள்ளப்பெருக்கிற்கு மிகப் பிரதானமான காரணம். மலையகம் வரலாற்றில் இல்லாதவாறு மிகப் பெரிய உயிரிழப்புக்களை சந்தித்துள்ளது.

அனர்த்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் தொடர்பில் அச்சநிலையும் தோன்றியிருக்கின்றது. இன்று வரைக்கும் சரியான உறுதியான எண்ணிக்கைகள் வெளியிடப்படவில்லை. ஏனென்றால் இன்னமும் மீட்புப் பணிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மலையகத்தை பொறுத்தமட்டில் தற்சமயம் மீட்புப் பணிகள் இடம் பெற்று

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# மாவிலாறு உடைப்பும் ! மாபெரும் வெள்ளமும்!

பா. அரியநேத்திரன்

திருகோணமலை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மாவிலாறு அணைக்கட்டு கடந்த *2025* நவம்பர் *30* ல் உடைப் பெடுத்தது.



இதன் விளைவாக திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசம் முற்றாக வெள் ளம் நிரம்பியது இதனால் மொத்தமாக *25 865*, குடும்பங்களை சேர்ந்த *86 173* நபர்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை கல்லரிப்பு பகுதி மக்களும் மாவிலாறு உடைப்பால் பாதிப்புற்று இடைத்தங்கல் முகாமில் இன்றுவரை தங்கவைக்கப்பட்டுள்ளனர்.


திருகோணமலை மாவிலாறு என்ற பெயரை கூறினால் ஒரு ஞாபகம் கடந்த *19* வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு உண்மை பலருக்கு தெரியவரும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே *2002* பிப்ரவரி *22* ஆம் திகதி நோர்வே நாட்டின் அனு சரணையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் அப்போதைய இலங்கை பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும் கைச்சாத்திட்டனர்.



இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில் போர் நிறுத்த மீறல்கள் பல இலங்கை இராணுவத்தாலும் அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் ஆயுத ஒட்டுக்குழுவான பிள்ளையான் குழுவாலும் இடம்பெற்றன. அதில் குறிப்பிட்டு கூறக்கூடியது திருகோணமலை மாண வர் படுகொலை *2006* ஜனவரி *02* நிலாவெளி கடற்கரையில் ஐந்து தமிழ்மாணவர்கள் இராணு வத்தால் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூ ரமாகும் அது நடைபெற்று ஏழு நாட்களின் பின்னர் அதே மாதம் *2006* ஜனவரி *09* ல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனத்தில் மட்டக்களப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது வெலிக்கந்தையில் தமிழ் ஆயுதக்குழுவான பிள்ளையான் குழு வழிமறித்து இதில் பயணம் செய்தவர்களில் பிறேமினி உட்பட ஏழு பேர் துப்பாக்கிமுனையில் கடத்தி கொல்லப்பட்டனர்.



இவ்வாறு ஏறக்குறைய *50* போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்ற நிலையில் *2006* யூலை *21* அன்று திருகோணமலை மாவிலாற்றில் விவ சாய நிலங்களுக்கான நீர் பாய்ச்சும் பிரச்சினை நேரடி மோதலாக விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் ஏற்பட்டு போர் துவங்கியது. அந்தப்போர் தொடங்கிய இடம் இதே மாவிலாறு அணைக்கட்டில் தான் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன். அன்று போர் காரணமாக மாவிலாறு அணைக்கட்டு செயற்கை முறையில் உடைக்கப்படக்கூடிய அபாயநிலை இருந்தது. *2006* யூலை *21*ல் திருகோணமலை மாவிலாற்றில் தொடங்கிய போரால் திரு கோணமலை மூதூர் சம்பூர் பகுதிகளில் விமா னக்குண்டுத்தாக்குதல்களும் எறிகணைத் தாக்கு தல்களையும் இராணுவம் மேற்கொண்டதால் அந்த பகுதி மக்கள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைக்கு இடம்பெயர்ந்தனர்.



*2006* நவம்பர் *08*ம் திகதி எறிகணை மற்றும் விமானக்குண்டு தாக்குதலால் வாகரையில் ஒரேநாளில் *35* பேர் கொல் லப்பட்டும் நூற்றுக் கணக்கானவர்கள் காயப்பட்டனர். பின்னர் வாகரை மக்களும் திரு கோணமலை மாவட்ட மக்களுடன் சேர்ந்து மட்டக்களப்பு நகர்பகுதி பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கவைத்த வரலாறும் உண்டு. அன்று போர் நிறுத்தம் உள்ள நிலையில் திருகோணமலையில் தொடங்கிய போர் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கேந்திர பகுதியான படுவான்கரைப்பெருநிலம் வரை நீடித்து ஏறக்குறைய ஓராண்டு தொடர் மோதலுக் குப்பின்னர் *2007* யூலை *11*ல் மட்டக்களப்பு குடும்பி மலையைக்கைப்பற்றியபின் கிழக்கு மாகாணத்தின் முழுக் கட்டுப் பாடும் தங்கள் வசம் வந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த உத்தியோகபூர்வமாக அறிவித் தார்.

*2006* யூலை *21* ல் மாவிலாறு அணைக்கட்டு இராணுவம் விடுதலைப்புலிகள் மோதலால் உடைபடக்கூடிய பதட்டமான சூழல் அப்போது இருந்தது. அது இறைவன் சித்தத்தால் அப்படி ஏற்படவில்லை. ஆனால் *19* வருடங்கள் கடந்து இன்று இயற்கை அனர்த்தம் காரணமாக *2025* டிசம்பர் *30* ல் மழை வெள்ளத்தால் அணைக்கட்டு உடைக் கப்பட்டு மக்களை அவலத்துக்கு தள்ளியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை நகர், மூதூர் போன்ற பல பிரதேசங்கள் வெள்ள அபாயத்துக்குள் சிக்குண்டுள்ளன. இப்பிரதேசங்களில் உள்ள தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் தமது வீடுகளுக்குள் வாழ முடியாத அவலத்தை எதிர் கொண்டுள்ளனர். பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மக்கள் இடம் பெயர்ந்து தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் திருகோணமலை மூதூர் பிரதான தரைவழிப் பாதை வயல் வெளிகள் யாவுமே கடல்போல் காட்சி யளித்தன.

விமானப்படை மீட்பு பணிகளில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இயற்கை விட்ட தூது



இயற்கையின் சீற்றத்தினாலும், சிறிலங்கா முப்படைகளினாலும் எமது மக்கள் மீண்டும், மீண்டும் சந்தித்த உயிரிழப்புக்களும், உடற்காயங்களும்,பொருண்மிய இழப்புக்களும், தொழில்முடக்கங்களும்சொத்து அழிவுகளும், இடப்பெயர்வுகளும், இவற்றினால் ஏற்பட்ட மனவுளைச்சல்களும், எமது மக்களை அடங்கி மூச்சிழந்து போகச் செய்திடவில்லை,மாறாக மீண்டெழுந்து வாழ்வதற்காக போராடும் வல்லமையைத்தான் எமது மக்களுக்கு கற்றுத் தந்திருக்கிறது.

உலைக்களத்தில் கொட்டியும் உருகிப் போகிடாத மக்களினதும், புயல் புகுந்த பின்னரும் புதையுண்டு போகாத மக்களின் பட்டறிவு முதிர்ச்சியும் கணக்கெடுத்தே ஆகவேண்டும்.



விழ, விழ நிமிர்தெழுந்து, நிமிர்தெழுந்து வீறுகொண்ட மக்களாக, சிலிர்த்தெழந்து மறு தருணத்திற்காக காத்திருக்க பழகிய இயல்பான மனம்கொண்ட மக்கள்தான் எமது மக்கள்.

எந்தவித திட்டமிட்டத் தடையுமின்றி அவர்களுக்குத் தரவேண்டிய உரிமையைத் தந்து விட்டு அவதானியுங்கள் அவர்கள் செய்து முடிப்பார்கள்.

கட்டளைத் தெளிவு உரியமுறையில் இருக்குமாயின், ஊரோடு திரண்டு மீட்புப் பணியில் ஈடுபடுவர். போர்ப்படைபோல் அணிவகுத்து மக்களையும்,தேசத்தையும் காப்பார்கள். இங்கு எமது மக்களுக்கான தெளிவான, தூய்மையான கட்டளையிடலே அவசியமாகிறது.

எமது மக்கள் பரிதாபத்துக்குரியவர்கள் அல்லர். அடிநெஞ்சில் சேர்த்து வைத்திருக்கும் நெருக்கடிகால துணிச்சலும்,எத்தகைய இடர்களையும் தாங்கும் மனோதிடமும் அவர்களை விட்டு ஒருபோதும் அகலாது.

தம்மை முழுமையாக அர்ப்பணித்த பல்லாயிரம் தற்கொடையாளர்களை உவந்தளித்த உதரமும், இரத்த உறவுளும் பிறப்பெடுத்த தாய்மண் என்பது, மெய்சிலிர்க்கும் அதிசய சொர்க்கமாகும்.

எங்கள் தேசம் பிச்சை இல்லாமல் வாழ்ந்த தேசம், வாழவைத்த மக்கள்தான் எங்கள் மக்கள். சலுகை அரசியலால் சலிப்படைந்து போனவர்களுக்கு நிவாரண வரிசையில் நிற்பதென்பதுகூட நல்ல பொழுது போக்காகத்தான் அமையும்.

அரசே, தயவுசெய்து இனியாவது உலுத்துப்போன அரசியல் அளவுகோலை தூக்கி வீசிவிட்டு, தமிழ்மக்களின் தாயகத் தன்னாட்சி கோரிக்கைக்கு செவிகொடு.

சீறி சினமெடுத்த கடல் அலைகளூடே போர்விசைப் படகில் சவாரிவந்த கடற்காவிய நாயகர்களின் ,அவர்களின் இரத்த அணுக்களின் உப்புச் சுவை உணர்ந்தவர்கள். கடல், நிலம், வான் இணைசேர் தாயக எல்லைக்கோட்டின் புள்ளிகளும், வளைவுகளும் எமது செங்குருதியால் ஆனவையே.

உடைந்த பாலத்தின், ஒரு பகுதி மூலைக்குள் நின்றுகொண்டு சத்திர சிகிச்சை செய்த நெஞ்சுரமும், பதட்டமில்லா உறுதிமிக்க கரங்களையும் கண்டு மிடுக்கேற்றிய மக்கள் எமது மக்கள். சுனாமிக்கான மனிதாபிமான உதவித் திட்டத்தை சிதைத்த மரபு, யாரது மரபு?. பதினேழு பாரஊர்திகளில் மனிதாபிமானத்தை கொட்டி நிறைத்து அனுப்பி பசியாற்ற வைத்த மரபு யாரது மரபு? தலைக்கு மேலே வெள்ளம் ஏறியும், சாண் போனால் என்ன முழம் ஏறினால் என்ன அதற்கு அப்பாலும் சென்று இயற்கையுடன் உரையாடும், உறவாடும் மக்கள் தான் நமது மக்கள்.

வெய்யில் சற்று ஏறிக்கட்டும், களத்து மேட்டில் காத்தான் கூத்து போடுவார்கள். தரை ஈரம் காயட்டும் , வண்டிற் சவாரி விடத் தயாராவார்கள்.

வெள்ளம் வடியமறுத்தால் மறு கணம் படகோடு மீட்புப்பணிக்கு விரைவார்கள். குண்டுவீசி பள்ளியை முடக்கிய போதும் மரநிழலில் பரீட்சை எழுதியவர்கள் எம்பிள்ளைகள் எங்களுடையவர்களே எங்களுக்கு முன்னுதாரணமான புருஷர்கள்.



இறந்த கால்நடைகளை எண்ணி எண்ணி விம்முவார்கள். ஆடுகளையும் மாடுகளையும் வெள்ளம் அள்ளிச் சென்றுவிட்டது. வயல் விதைப்பெல்லாம் அழிந்து நாசமாகிவிட்டது. வெள்ளநீர் புகுந்து சிறுக சிறுக சேர்த்துவைத்த பாவனைப் பொருட்களை செயலற்றதாக்கி விட்டது ஆயினும், வெள்ளம் வற்றி ஒரு பசுவும் கன்றும் மிஞ்சினால் போதும் என்பதே இவர்களின் அதி உன்னதமான செபமும், தவமுமாகும்.

இறைவனும், இயற்கையும் அவர்களோடேயே சொந்தம் கொண்டாடும். இப்போ, தமிழ் மக்களின் அரசியல் கைக்கட்டுக்களை அவிழ்த்து விடுங்கள் என்பதுதான் சிறிலங்கா அரசிற்கு இயற்கை விட்ட தூது.

**அ. சுரேஷ் ( மன்னார்)**

## டிசம்பர் 9, 10 . . . தொடர்ச்சி . . .

நிலை இலங்கைக்குத் தொலைவில் தென் கிழக்குத் திசையில் அந்தமான் தீவுகளுக்கு அருகில் காணப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## எதிர்க்கட்சிகள் . . . தொடர்ச்சி . . .

கூறியுள்ளனர் இயற்கை அனர்த்தம் என்பது படுகொலை ஆகாது. இயற்கை அனர்த்தங்கள் இயற்கையாக மழை, வெள்ளம், காற்று, நெருப்பு, என்பனவற்றில் ஏற்படும் பேரழிவுகளாகும். அவை மனிதனால் நிகழ்த்தப்படும் படுகொலை போன்ற திட்ட மிட்ட செயல்களால் ஏற்படுவதில்லை. இயற்கையின் சீற்றத்தால் மனிதர்களுக்கும், உடைமைகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுவதால் அது அனர்த்தம் என அழைக்கப் படும்.

படுகொலை என்பது மனிதன் மனிதனை கொல் வதே படுகொலை மனிதன் எதிர்பாராத இயற்கை அனர்தங்களால் மரணிப்பது படுகொலை இல்லை அது இயற்கை அனர்த்த உயிரிழப்பாகவே கூறப்படும். இயற்கை அனர்த்தம் காரணமாக இறந்தவர்களை படுகொலை என்று வர்ணிப்பது அரசியல் அநுபவம் அற்ற சொல்லாடலாகவே பார்கப்படும்.

தற்போதைய பேரனர்த்தத்தில் இருந்து மக்களை மீண்டெடுக்க கட்சி அரசியல், தனிநபர் அரசியல், எதிர்ப்பு அரசியல், என்பவற்றை தள்ளிவைத்து சகல தரப்புகளும் ஒற்றுமையாக செயல்பட வேண்டியது கட்டாயம்.

கடந்த வாரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூட்டாக கண்டி மாவட்டத்தில் அரச அதிபரிடம் சென்று இயற்கை அனர்த்தம் தொடர்பாக உரையாடியபோது அவர் மீது பிழை பிடிப்பதை போன்ற விமர்சனங்கள் முன்வைத்தமை தொடர்பாக சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

எதிர்கட்சிகள் எதிரிக்கட்சிகளாக செய்படுவதை தவிர்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு படம் காட்டாமல் மனிதாபிமானப் பணிகளை செய்வதே இன்றைய தேவையாகும்.


வடகிழக்கை மையப்படுத்திய தமிழ்த் தேசிய கட்சிகள் தென்னிலங்கை எதிர்கட்சிகளுடன் இணைந்து தென்பகுதிகளுக்கு சென்று தமது தனித்துவத்தை இழக்காமல் தென்பகுதி, மலையகப்பகுதிகளுக்கு தனித்துவமாக தனியாக தமிழ்தேசிய கட்சிகளாக தமிழ்தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்தேசிய கட்சி தலைவர்கள் உறுப்பினர்கள் கூட்டாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மனிதாபிமானப்பணிகளை செய்வதே சிறப்பான அரசியல் பணியாகும்.

## இஸ்ரேலினால் . . . தொடர்ச்சி . . .

குழுவாக தன்னைக் காட்டிக் கொண்டது. அந்தக் குழுவிற்கான அதன் இறுதி இலக்கு ஒருபோதும் தெளிவாக இல்லாவிட்டாலும், குறிப்பாக மக்கள் படைகளுக்கு எந்த வகையான மக்கள் ஆதரவும் இருக்கவில்லை.

ஏனென்றால், பல பாலஸ்தீனியர்களுக்கு, அபு ஷபாப் ஒரு குற்றவாளி. காசா மீதான போரின் ஆரம்பகாலத்தில்சிறையில்இருந்துதப்பிப்பதற்கு முன்பு, அவர் பல ஆண்டுகளாக காசாவில் பாலஸ்தீன அதிகாரிகளால் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

காசாவில் இனப்படுகொலையைச் செய்த இஸ்ரேலுடனான அவரது கூட்டணி, பெரும்பாலான பாலஸ்தீனியர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அவரது கொலை “பழங்குடியினரின் வரலாற்றை பிரதிநிதித்துவப் படுத்தாத ஒரு இருண்ட அத்தியாயத்தின் முடிவு என்று அவரது சொந்த பழங்குடியினர் தெரிவித்துள்ளனர்.



# இலங்கையில் டிற்வா புயலின்
# மாபெரும் அழிகளும் மீட்புப்பணிகளும்

**பேரழிவின் வலிமை – முழுமையான அழிவு இந்த புயல் எந்த அளவுக்கு சேதங்களை ஏற்படுத்தியுள்ளது?**

இந்த புயல் ஒரு சாதாரண சூறாவளியின் தாக்கம் அல்ல. மக்கள் பொதுவாக புயல் என்றால் காற்று மரங்களை முறித்துவீழ்த்தும், சில வீடுகளின் கூரைகளை பியக்கும்—அவ்வளவு தான் நினைப்பார்கள். ஆனால் இம்முறை ஏற்பட்டதுமுற்றிலும் வேறுவிதமான ஒரு அழிவு. நான் 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலை குழந்தையாக அனுபவித்திருக்கிறேன். அப்போது மரங்களே அதிகமாக விழுந்தன; மக்கள் அதில் இருந்து பெரும்பாலும் உயிர் தப்பினர். ஆனால் இம்முறைஇயற்கை நம்மை மன்னிக்காமல் கொடூரமாக தாக்கியுள்ளது. காற்று, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு—இந்த மூன்று பேரழிவுகளும் ஒன்றாக இணைந்து, ஒரு நாட்டின் வாழ்க்கை அமைப்பையே சிதறடித்துவிட்டன.


பலமாவட்டங்களில்முழுகிராமங்கள்நீரில் மூழ்கி, வீடுகள் சுவரோடு சுவர் கரைந்து விழுந்தன. சில வீடுகள் நீரில்முழுக்க மூழ்கி, கூரையின் மேல் மட்டுமே மக்கள் நின்று கத்தி உதவி கேட்டு கொண்டு இருந்தார்கள். சில இடங்களில்மக்கள் பல மணி நேரங்கள் குழந்தைகளைக் கைகளை உயர்த்தி தூக்கி, கீழே நீரில் அடிபடாமல்பாதுகாத்திருக்கிறார்கள். நான் நேரடியாக பார்த்தேன்—குடும்பம் ஒன்றே படகுக்காக காத்திருந்தது, அவர்களால்எதையும் காப்பாற்ற முடியவில்லை: ஆடைகள், ஆவணங்கள், சாமான்கள், மின் சாதனங்கள்—எதுவும் இல்லை; அவர்கள் உயிரோடு நின்றதை மட்டுமே காப்பாற்ற முடிந்தது.

**அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கை குறித்து சொல்லுங்கள்.**

அரசாங்க தகவல்படி 410 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை முழுமையானது அல்ல. 336 பேர் காணாமல் உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் மண்சரிவு அடித்த பகுதிகளில், மண்மற்றும் கற்கள் மற்றும் வீட்டு இடிபாடுகளுக்குள் புதைந்து இருக்கலாம். மீட்புப்பணியாளர்கள்சிலஇடங்களில்இன்றுவரை போகவே முடியவில்லை. மலைச்சரிவு தடுப்புப் பகுதிகள் இன்னும் நிலைகுலைந்து இருக்கின்றன; அங்கேநிற்கவே முடியாது.

ஒரு தந்தை தனது மனைவியையும் இரு குழந்தைகளையும் கையில் பிடித்திருந்த நிலையில் அவர்களை வெள்ளம் இழுத்துச் சென்ற சம்பவம் நேரடியாகக் கேட்க நேரிட்டது. “நான்அவர்களை காப்பாற்ற முடியவில்லை” என்ற ஒரே வாக்கியத்தை மட்டுமே கூறினான். அப்படிப்பட்ட நெஞ்சைசிதைக்கும் கதைகள் ஏராளம்.

**இப்போது மக்கள் எதிர்கொள்ளும் உடனடி சிரமங்கள் என்ன?**



**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு சபாரத்தினம் சிவயோகநாதன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

மின்சாரம் பல இடங்களில் இன்னும் கிடைக்கவில்லை. மின்சாரம் இல்லாததால் நீர்பம்புகள் இயங்காது; எனவேகுடிநீர் கடுமையான தட்டுப்பாடு. மக்கள் தண்ணீர் வாங்க வரிசை யில் நிற்கிறார்கள். நீர் கிடைத்தாலும் சுத்தமில்லா நீராகவே இருக்கின்றது; நோய்கள் பரவும் நிலை. சில இடங்களில் குழந்தைகள் வயிற்றுப்போக்கால் மருத்துவமுகாம்களுக்கு கொண்டு செல்லப் பட்டனர். மருத்துவமனைகளில் கூட மின்சாரம் இல்லாத நிலை இருந்தது.

**செயல்பாடுகள் மீண்டும் எப்போது தொடங்கும் என நம்பப்படுகிறதா?**

சாலைகள் வெள்ளத்தில் கரைந்து போய் விட்டன. திருகோணமலை – மூதூர் மேம்பாலம் உடைந்து சாலைமுழுவதுமாக நதியாக ஓடுகிறது. மன்னம்பிட்டி சாலை மூன்று நாட்கள் முற்றிலும் முடங்கியது. நாங்கள் உலருணவு எடுத்துச்செல்லும்போது டிராக்டர் பயன்படுத்த வேண்டியிருந்தது. இன்னும் பல இடங்களில் மக்கள் “எங்களை காப்பாற்றயாராவது வருவார்களா?” என்று காத்திருக்கிறார்கள்.

**பலர் இதை 2004 ஆழிப்பேரலையுடன் ஒப்பிடுகிறார்கள். உங்கள் பார்வை என்ன?**

ஆழிப்பேரலை உயிரிழப்பின் எண்ணிக்கையில் மிகப்பெரியது; ஆனால் அது ஒரு குறிப்பிட்ட கடற்கரைப் பகுதிக்குமட்டும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த பேரழிவு முழு இலங்கையையும் தாக்கியது—உயிர்கள் மட்டுமல்ல, வீடுகள், தொழில்கள், வேளாண்மை, கட்டமைப்பு, அரசு நிர்வாகம்—ஒன்றும் இயங்கவில்லை.

இதன் தாக்கம் குறைந்தது அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இலங்கையின் பொருளாதாரத்தையே மாற்றி விடும்.

இச்சூழ்நிலையில் கூட தமிழர் நிலத்தை அபகரிப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன என்பது குறித்த குற்றச்சாட்டுபற்றி சொல்லுங்கள்.

ஆம், அது மிகப் பெரிய உண்மை. வடகிழக்கில் பௌத்த விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகள் பேரழிவு வந்தாலும், மக்கள் இறந்தாலும், வெள்ளத்தில் வீடுகள் மூழ்கினாலும் கூட நிறுத்தப்படவில்லை. சஜித் பிரேமதாசா வடக்கு–கிழக்கில் 1000 விகாரைகள் கட்டும் திட்டத்தை முன்னெடுத்தவர். குருந்தூர் மலை விகாரைக்கு எதிராக நீதிமன்றம்தடை கொடுத்திருந்தும், அதை மீறி வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த உத்தரவை வழங்கிய நீதிபதி பின்னர்மர்மமாக காணாமல் போனார். இது விளக்கமில்லாத மற்றும் மிகப்பெரிய அபாயம் கொண்ட நிகழ்வு.

தொல்லியல் திணைக்களம், வனத்துறை என்ற பெயரில் நிலங்களை கைப்பற்றுகிறார்கள். பிறகு புத்தர் சிலைவைக்கப்படுகிறது; அதற்குப் பிறகு விகாரை; அதன் பிறகு அந்த பிரதேசம் முழுவதும் பௌத்த துறவிகளின் ஆட்சி. தமிழர் நில உரிமைகள், குடியேற்றம், வரலாறு—*all erased.*

**தமிழ் அரசியல்வாதிகள் இந்த சூழ்நிலையிலிருந்து என்ன கற்றுக்கொண்டுள்ளனர்?**

கற்றுக்கொள்ளவில்லை. பல தடவைகள் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். சஜித்திற்கு ஆதரவாக ஓடி பேசியவர்கள்இன்று எதிராக பேசுகிறார்கள். இது தமிழர் அரசியலின் மிகப் பெரிய துரதிர்ஷ்டம். இன உணர்வும் வரலாற்றுஉண்மையும் இல்லாத தலைமைகளால் மக்கள் அழிவதையே அனுபவிக்கிறார்கள். தமிழ் மக்கள் அதிகவிழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய காலம் இது.

• • •

# குருதிஷ் மக்கள் ஏன் ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்தனர்?

## இனப்படுகொலைக்கு உள்ளான அரசற்ற ஒரு தேசிய இனத்தின் வெளியுறவுக் கொள்கை அனுபவம்.

### பகுதி 2

மு.திருநாவுக்கரசு.

"எதிரியின் எதிரி உனது இயற்கையான நண்பன்" அதாவது உனது எதிரி எனக்கும் எதிரி என்ற வகையில் நீ எனக்கு நண்பன். மொட்டையாக பார்த்தால் இது சரிதான்.

ஆனால் இதனுடன் இன்னொரு கோட்பாட்டையும் இணைத்துப் பார்ப்போம். அதாவது உனது நண்பனின் நண்பன் உனக்கு நண்பராக இருக்க முடியும் என்று மொட்டையாக சொல்ல முடிந்தாலும் உனது நண்பனின் நண்பனுக்கும் உனக்கும் இடையே வேறுபாடு இருக்க முடியும். அந்த வேறுபாட்டால் உனது நண்பனின் உறவுக்கும் உனது நண்பனின் நண்பனின் உறவுக்கும் இடையேயான உறவில் பங்கம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உனது நண்பர்களுக்கு உண்டு. அதாவது எதிரியின் எதிரியான உனது நண்பன் அல்லது நேரடி நண்பனை பாதிக்காது இருக்க கூடிய வகையிற்தான் உன்னுடன் உறவு கொள்வான். எனவே எதிரியின் எதிரி முழு அளவில் உனக்கு நண்பனாக இருக்கலாம் என்பது நிச்சயமில்லை. இது சூழல் சார்ந்த நிபந்தனைக்கு உட்பட்டது.

அதாவது சதாமின் எதிரியான அமெரிக்காவுக்கு குருதிஷ் நண்பர். ஆனால் அமெரிக்காவின் நண்பனான துருக்கிக்கு குருதிஷ் நண்பர் அல்ல. இங்கு குருதிஷும் துருக்கியும் நேரெதிர் எதிரிகள். அதாவது இங்கு குருதிஷ் விடுதலை அடைந்து சுதந்திர அரசானால் குருதிஷுக்கு அருகே நிலத்தொடர்பால் ஒட்டியவாறு இருக்கும் துருக்கிய குருதிஷ் இன மக்கள் துருக்கியில் இருந்து பிரிந்து சுதந்திர குருதிஷ் அரசுடன் இணையக்கூடிய வாய்ப்பு பெரிது. எனவே துருக்கிக்கு அருகே இருக்கும் ஈராக்கில் இருந்து ஈராக்கிய குருதிஷ் பிரிந்து செல்வதை துருக்கி ஒருபோதும் ஏற்காது.

அதேவேளை அமெரிக்காவின் நேட்டோ நட்பு நாடான துருக்கி அமெரிக்காவுக்கு அவசியம். ரஷ்யாவுக்கு மிக அருகில் ரஷ்யாவை நோக்கி ஏவுகணைகள் பூட்டி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க தள நாடு துருக்கி. இந்த இடத்தில் குருதிஷை விடவும் அமெரிக்காவின் முதல் நண்பர் துருக்கி.

அதேபோல ஒரு இஸ்லாமிய நாடான ஈராக்கில் சதாம் ஹுசைனுக்கு எதிராக அங்கு யுத்தம் புரிகையில் ஈராக்கில் உள்ள சதாமுக்கு எதிரான இஸ்லாமிய குருதிஷ் இன மக்களின் ஆதரவு அமெரிக்காவுக்கு உறுதுணையானது.

குருதிஷ் இன போராளிகளுடன் கூட்டணி சேர்ந்து அமெரிக்க இராணுவம் ஈராக்கில் யுத்தம் புரிந்தது. அந்த யுத்தத்தில் ஈராக்கிய படையை அமெரிக்க இராணுவத்தால் முற்றிலும் தோற்கடிக்க முடிந்தாலும் சதாம் ஹுசைனை கண்டுபிடிக்கவோ சிறைப்பிடிக்கவோ முடியவில்லை. இந்நிலைமையில் குருதிஷ் போராளிகள்தான் மறைவிட சுரங்க அறையை கண்டுபிடித்து அவரை கைது பண்ண உதவினர். அதாவது தம்மால் எதிர்கொள்ள முடியாத ஈராக் எதிரியை பலம் பொருந்திய அமெரிக்காவுடன் சேர்ந்து எதிர்கொள்வதைத் தவிர குருதிஷ் மக்களுக்கு வேறு வழி இல்லை.

அதேவேளை துருக்கிக்கு மாறாக அமெரிக்கா குருதிஷ் விடுதலைக்கு ஆதரவளிக்காது என்றாலும் ஈராக்கில் உள்ள இஸ்லாமியர்களான குருதிஷ் மக்களின் ஆதரவை பெற வேண்டும் என்கின்ற நிலையில் குறைந்தபட்ச நலன் கருதி குருதிஷ் மக்களோடு அமெரிக்கா குறைந்தபட்ச உடன்பாட்டுக்கு தயாராக இருந்தது. அதனைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் குருதிஷ் மக்கள் ஒரு வகைச் சமஸ்டி முறைக்கு சம்மதித்தனர்.

அமெரிக்காவுக்கு துருக்கி பெரிய நண்பன்; குருதிஷ் இன மக்கள் சிறிய நண்பன். எனவே இந்த இரண்டுக்கும் நடுவில் துருக்கியின் விருப்பப்படி தனிநாடல்லாத குருதிஷ் மக்களின் குறைந்தபட்ச தேவைக்கான சமஸ்டி முறையை இரண்டுக்கும் நடுவில் தேர்ந்தெடுத்தது. அதனை ஏற்க வேண்டியதே குருதிஷ் மக்களின் தலைவிதியாய் அமைந்தது. அதாவது முழு நீதி அல்ல ஒரு அரைநீதியாவது நீதியாய் அமைந்தது. ஆனால் அமெரிக்காவின் தேவைக்கு இது முழு நீதி. அதாவது ஒரு மக்கள் கூட்டத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் அளவே மக்களின் நீதி அளவை நிர்ணயிக்கும். ஒரு போதும் நீதி என்பது நீதியானது அல்ல . மாறாக அது கொண்டிருக்கக் கூடிய அதிகாரத்தின் அளவே அது பெற்றுக் கொள்ளக் கூடிய நீதியின் அளவாகும்.



உலக அரசுகள் பேசும் நீதி என்ற சொல்லாடலின் போலித் தன்மை சுருக்கமாக, இங்கே அரசுகள் வழங்கும் நீதிகளும், மக்கள் பெறும் நீதிகளும் அறத்தின் பக்கம் நடுநிலையாக நின்று, நீதி, நேர்மை, அறவியல் கோட்பாடுகளுக்குள் சிந்தித்து உருவாக்கி வருவதில்லை. கம்யூனிச நீதி என்றோ, முதலாளித்துவ நீதி என்றோ , சோசலிச நீதி என்றோ கொள்கைகளின் அடிப்படைகளில் கூட நீதிகள் நிலைநாட்டப்படுவதில்லை.

மாறாக அரசுகள், இனக்குழுக்கள் தத்தம் பொருளாதார, அரசியல் நலன் சார்ந்த தேவைகள், சுயநலன்கள், பாதுகாப்பை ஒட்டியே நீதிகள் உருவாக்கப்படுகின்றன, நீதிகள் வழங்கப்படுகின்றன. இதுவே இன்று வரையிலான உலக வரலாற்றின் நீதிக் கோட்பாடு ஆகும்.

உலகில் இத்தகைய முரணான சுயநலமான நீதிக் கோட்பாடு நிலவுவதாற்றான் உன்னதமான சிந்தனைகளைக் கொண்ட கம்யூனிச சித்தாந்த அரசுகள் தங்கள் உன்னதங்களை விடுத்து இனங்களை அடிமைப்படுத்தியதும், படுகொலைகள் செய்ததும் நிகழ்ந்தது. அதேபோல உதிர்ந்து விடும் சித்தாந்தம், ஆதிக்க சித்தாந்தம், படுகொலைகள் நிகழ்த்திய சித்தாந்தம் என்று அறியப்படும் ஏகாதிபத்திய சிந்தனைகளைக் கொண்ட அரசுகள் இனவிடுதலைக்கு ஆதரவு தந்ததுமான விந்தைகளும் நடந்தேறியுள்ளன.

எந்தொரு இலட்சியமும், தத்துவமும், கோட்பாடும் நடைமுறையால் மெய்ப்பிக்கப்படாது விட்டால் அது வரண்ட வாதமும் எதிரியின் சேவகனும் சாத்தானின் நண்பனுமே ஆகும்.

எல்லாவிதமான ஜனநாயக, சோசலிச, கம்யூனிச, புனித மத போதனைகளை விடவும் ஒரு மக்கள்கூட்டத்தின் உயிர்வாழ்வு முதன்மையானது. அதிகாரமின்றி உயிர் வாழ்வில்லை. மேற்படி எல்லா போதனைகளும் அதிகாரத்திற்கு உட்பட்டவையும் அதிகாரத்தை தர்மமாக கொண்டவையுமே தவிர தூய நீதி என்னும் தர்மத்தை கொண்டவைகள் அல்ல. எப்படியோ குருதிஷ் இன மக்களின் தெரிவு தூய போதனைகளுக்கு அப்பால் உடனடி உயிர் வாழ்வாகும்.

யதார்த்தத்தில் கூருதிஷ் இன மக்களுக்கு உயிர் பாதுகாப்புக்கான ஒரே ஒரு பாதைதான் இருந்தது. அதுவும் முழுவழிநட்பு பாதை அல்ல. அரைவழி நட்புப் பாதை (Midway friend or semi friend). ஏறக்குறைய இதே பாதையைத்தான் யூகோஸ்லாவியாவில் வாழ்ந்த தேசிய இனங்கள் சேர்பிய இனப்படுகொலைக்கு எதிராக கைக்கொண்டன. இதில் அமெரிக்கா தனது பார்வையில் முழு நிறைவான நீதியை அடைந்தாலும் ஒடுக்கப்பட்ட, படுகொலைக்கு உள்ளான இனங்கள் பெற்றுக் கொண்டது அரை நீதியே ஆயினும் தத்தமது தற்பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டன.

மொத்தத்தில் இங்கு பரந்த குருதிஸ் இன மக்களில் ஒரு பகுதியினரான ஈராக்கிய குருதிஷ் மக்கள் தமது நிலையில் தமக்கு நடைமுறை சாத்தியமான ஒரு வெளியுறவுக் கொள்கையை வரலாற்றில் பின்பற்றி உள்ளனர் என்பது கண்கூடு. இறுதியிலும் இறுதியாக நடைமுறைச் சாத்தியமிக்க பொருத்தமான ஒரு வெளியுறுப்பு கொள்கை இன்றி எந்தொரு அரசற்ற தேசிய இனமும் ஒருபோதும் விடுதலை அடைய முடியாது.

சொர்க்கத்துக்கு போவதற்கான தவம் செய்ய வேண்டுமே ஆயினும் அந்தத் தவசிக்கு பாதுகாப்பு முதன்மையானது.

கற்பனைகளைக் கடந்த புனித இலட்சியங்களுக்கும் அப்பாலான நடைமுறை சார்ந்த ஒரு வெளியுறுப்பு கொள்கையை ஈழத் தமிழர் வகுத்தாக வேண்டியதற்கு வரலாறு பல தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை இரத்தமும் தசையுமான அனுபவங்களாக முன் வைத்துள்ளது. அதில் குருதிஷ் ஒன்று 21 இலட்சம் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளான பியவ்ஃறா போராட்டம் இன்னொன்று என்ன பல போராட்டங்கள் நீன்று செல்கின்றன. இங்கு வெற்றி பேற்றவற்றில் இருந்தும் தோல்வி அடைந்தவற்றிலிருந்தும் அழிந்து போனவற்றில் இருந்தும் தக்க படிப்பினைகளைப் பெற வேண்டியது இனப்படுகொலை அழிவுக்கு உள்ளாகி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாய் போராடி வரும் ஈழத் தமிழினத்திற்கு அவசியமாகும்.

வசீகரம் மிக்க தூய இரட்சிய பிரகடனங்களுக்கு அப்பால் நடைமுறை சார்ந்து தம்மை தக்க வைக்கவல்ல உள்ளும் புறமுமான கொள்கையை போராடும் அரசற்ற தேசிய இனங்கள் வகுத்தாக வேண்டும்.

*"If you have built castles in the air, your work need not be lost; that is where they should be. Now put the foundations under them." Henry David Thoreau*

நீங்கள் ஆகாய கோட்டைகளை கட்டி இருந்தால் அவை இருக்கும் இடத்தில் சேதமின்றி அப்படியே இருக்கும். ஆனால் இப்போ நீங்கள் செய்ய வேண்டிய வேலை அவற்றுக்கு கீழே அத்திவாரங்களை இடவேண்டும்.

குருதிஷ் மக்கள் ஆகாயக் கோட்டைகளை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சர்வதேசம் கண்டுணர வேண்டிய ஈழத்தமிழரின் அரசியல் தாகம்.



அ. சுரேஷ் ( மன்னார்)

நவம்பர் 27.2025 தமிழீழ மாவீரர் நாள். ஆசீர்வதிக்கப் பெற்ற நாள். ஆசீர்வதிக்கப் பெற்ற தேசம். அனைத்து துன்ப துயரங்களையும் தாங்கிக்கொள்ளும் ஆசீர் பெற்ற மக்கள்.

எமது மக்களின், குறிப்பாக மாவீரர்களின் பெற்றோர், பிள்ளைகள், உரித்துடையோர், நண்பர்கள் இவர்களின் தாயக விடுதலை மீதான அடிவயிற்றின் ஆவேசம், என்றும் தணிந்துவிடப் போவதில்லை. அவர்களின் இதயச்சுவர்களில் பற்றியிருக்கும் தேசப் புதல்வர்களுக்கான நன்றியுணர்வானது, வானை மிஞ்சி உயர்ந்து நிற்கிறது.

இது எதிரிக்கும் தெரியும், தமிழீழம் அமைந்திடக்கூடாது என்ற, சுயநல அரசியல் சக்திகளுக்கும் புரியும். இவற்றை மேவிச் செல்லும் சிற்றோடையின் தூய நீரின் குணவியல்பு எம்மக்களிடம் உண்டு.

ஒற்றைப் புள்ளியில் ஒருங்கு குவியும் சூரிய ஒளிக்குச் சுட்டெரிக்கும் ஆற்றல் உண்டு, அவ்வாறே மாவீரர் துயிலுமில்லம் நோக்கித் திரண்டு ஒருங்கிசைந்து, எமது மக்கள் ஏற்றிவைக்கும் தீபச்சுடர்களின் திரட்சிக்கும் வல்லமை உண்டு.

உலகம் கண்டுணர வேண்டிய எமது மக்களின் தாயக விடுதலைத் தாகமும், ஆத்மார்த்த மான அரசியல் வேணவாவும் இதுதான்.

இயற்கையின் சீற்றத்தினாலும், இராணுவ, அரசியல் அழுத்தங்களினாலும் மாவீரர் வழிபாட்டு ணர்வினை தடுத்து, அடக்கி வென்றிட முடியாது.

ஏனெனில், சுனாமிப் பேரலையால் புரட்டி எடுக்கப்பட்டோம் என்று, தெரிந்தும் கூட கடல்மீது நம்பிக்கை கொண்டவர்கள் நம்மவர்கள். வலைகள் ஏற்றிய படகுடன் அலைமீது பயணிப்பர்.

வஞ்சக அரசியல் சுனாமியையும் கடக்கும் வல்லமையின் ஊற்றுவாய் இயல்பாகவே திறந்தேயிருக்கும். சுழல்காற்றில் சரிந்து, வீழ்ந்து அழிந்து போன வாழைத் தோப்பும், தென்னந்தோப்பும் கஷ்டத்தையும், கண்ணீரையும் தருவிக்கும். ஆனாலும், வீழ்ந்தவற்றை புதைத்து, உரமாக்கி விட்டுப் புதிய கன்றுகளை நாட்டுவிப்பர்.

அதன் பசுமையையும் செழிப்பையும் நம்பி போராடி வாழ்பவர்கள் எமது மக்கள். சரிந்து விழும் வாழை, தென்னைபோல அகப், புற எதிர்ப்புக் களையும் சாய்த்து, மனதில் நிமிர்வு கொள்வர்.

சிதைந்து, உருக்குலைந்த கல்லறைகளையும், நினைவுக் கற்களையும் மீளவும் அடுக்கி சுடரேற்றுவர், தமக்காக ஈகம் புரிந்த தமது மாவீரரை நினைந்துருகிச் செல்வர். எனவே இப்போதும் எமது தாயகம் ஆசீர்வதிக்கப்பட்டதே.

எமது மக்களுக்குப் போதுமான அரசியல் தெளிவும், பக்குவமும் உண்டு. ஏமாற்று அரசியல் எதுவென்றும் புரியும். அவர்கள் தமக்குப் பொருத்தமான தலைமையைத், தாமே தேர்வு செய்யும் அரசியல் ஆளுமை மிக்கவர்கள் மேதகு பிரபாகரன் தேசத்து மக்கள். ஆசீர்வதிக்கப் பெற்ற மக்கள்.

விதைக்க, விதைக்க அழிந்துவிடும் அளவிற்கு அடைமழை வெள்ளத்தால், நெல்வயல்கள் மூழ்கிப்போகிப் போகும், ஆனாலும் சிறு வெய்யிலுக்காகக் காத்திருப்பர், மறுபடியும் சூரியன் கண்ணசைப்பான் என இயற்கை எமது நண்பன் எனும் நம்பிக்கை மரபும் அவர்களதே. மீண்டும் சேற்றில் இறங்குவார்கள், வக்கடை கட்டு வார்கள், விதைப்பார்கள்.

நெற்பயிர் உயர, தோழ் நிமிர்த்துவார்கள், வற்றிப்போன வயிற்றின் இரைச்சல் அவர்களுக்கு கேட்கும், நல்ல சோறு போடுவார்கள், யாவரையும் காப்பார்கள்.

குன்றும், குழியும், அறுத்தோடிகளும் உள்ள தெருவில் குடைபிடித்தும், மழைக்கவசம் அணிந்தும், நடந்தும், ஈருருளி, உந்துருளியிலும்...

மாவீரர் துயிலும் இல்லம் நோக்கி வருவார்கள்.எதிரில் துப்பாக்கி ஏந்திய சிங்களப் படைவீரர் எவரும் இவர்கள் கண்களுக்கு மங்கலாகவேத் தெரியும். தடுப்பரண்கள் வெறும் புகை மூட்டம் என்றே கருதி, கைகளில் பூக்களுடனும், மாலைகளுடனும், ஊதுபத்திகளுடனும் வந்து, குறித்த நேரத்தில் கல்லறைகள், நினைவுகற்களின் முன்னால் மணியோசைக்காக காத்து நிற்பர், நெய்விளக்கேற்றி, சுடர்கள் அணைந்திடாமல் குடை விரிப்பர், மனதில் தாயக கனவின் உறுதியுடன், கையில் கனிமரக் கன்றுகளுடன் ஆசீர்வதிக்கப் பெற்ற மக்களாக வீடு திரும்புவர்.

ஆயிரம் வண்ண விளக்குகளால் இவர்கள் கண்கூசி நின்றவர்களில்லை.சின்னச் சிட்டியில் ஏற்றும் சுடரில் அகமலர்ந்து பூரிப்பார்கள். அலங் கார எடுப்பு, மேடை வசனிப்பு எதுவும் தேசக்காயம் ஆற்றப் போவதில்லை என்பதுதான் இவர்களின் வாதம்.

தம்மாவீர செல்வங்களுக்கு எதுவும் ஈடாகா தென நம்புகின்றவர்கள். இனியும் நம்புவார்கள்.கூட்டத்தின் நடுவே செயல் வீரர் யாரென மிக நிதானமாகத் தேடுவார்கள், நாவு பிறழா பேச்சுக்கு காதுகளை கூர்தீட்டுவார்கள்.

போரில் அழிந்தோம் வெள்ளத்தில் மூழ்கி னோம் ஆயினும் போதையில் அழிந்து மண்டி யிட்டு மிதக்காத தேசமாக ஆசிர்வதிக்கப் பட்டோம். அவர்கள் இருந்தார்கள். நாமும் இருந்தோம். தூய நினைவுகளை விதைத்தார்கள் அவர்கள் நிழலில் வாழ்கின்றோம்.

இது போதும் எமக்கு. முடிந்தால், எவரேனும் துணிந்து, தனித்துவத்தை இழக்காத அரசி யல் புரிதலோடும், அர்ப்பண அரசியல் உணர் வோடும்,மக்கள் நேசத்தோடும் வந்து தலைமை கொள்க. நினைவிற்கொள்வோம். மாவீரர் நாள் ஆசீர்வதிக்கப் பெற்ற நாள்.

• • •

## மாவிலாறு உடைப் ... தொடர்ச்சி ...

ஈடுபடுத்தப்பட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல் லப்பட்டனர். கிண்ணியாப் பிரதேசம் வரலாறு காணாத வெள்ளப் பெருக்குக்கு ஆளாகியுள்ளது.

மாவிலாற்றுக்கு நீர் வழமையாக மலை நாட்டில் பெய்கின்ற கன மழையால் மகாவலி கங்கையானது கிழக்கே குறிப்பாக வெருகல் மூதூர் ஆகிய பகுதிகளில் பல கிளைகளாக பிரிந்து வெருகல் பகுதியில் இரு கிளைகளாக பிரிந்து கடலுடன் கலக்கின்றது. அதிக மழைவீழ்ச்சி பதிவாகின்ற காலப்பகுதிகளில் மகாவலி கங்கையை மேவி பாய்கின்ற அல்லது உடைப்பு எடுக்கின்றபோது குறிப்பாக நாதனோடை அணைக்கட்டு உடைத்து வெருகல் பகுதி வெள்ளத்தில் மூழ்குவது வழமை. இது ஒவ்வொரு வருட இறுதியிலும் வழக்கமாக இடம்பெற்று வந்தது. இந்நிலையில் நாதனோடை அணைக்கட்டு உடைப்பெடுக்காத வகையில் போடப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளத்தின் தாக்கம் கடந்த சில வருடங்கள் குறைவாக காணப்பட்டன.

இந்நிலையில் மகாவலி கங்கையின் கிளையினால் வெளியாகின்ற பெருமளவான நீரை மறித்து மாவிலாறு அணைக்கட்டு கட்டப்பட்டு அதன் ஊடாக விவசாயத்திற்கு தேவையான நீர் பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. இது கிட்டத்தட்ட 15 அடிக்கு மேல் உயரமுடையதாக காணப்படுகின்றது. மலைநாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையின் காரணமாகவும் ஏணைய நீர்த்தேக்கங்கள் திறந்து விட்டதன் காரணமாகவும் மகாவலி கங்கையின் நீர் மட்டம் திடீரென அதிகரித்துள்ளதால் மாவிலாறும் நிரம்பி உடைப்பு ஏற்பட்டது.

ஏற்கனவே மாவிலாறு அணைக்கட்டு உடைப்பு எடுக்கவில்லை ஆனால் இம்முறை 13 இடங்களில் வெடிப்பு ஏற்பட்டு நீர் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிப்பு சுமார் 200 மீற்றர் தூரம் ஒரே இடத்தில் முழுமையாக மாவிலாறு அணைக்கட்டு உடைந்தமையால் வெள்ளம் வேகமாக தாழ்நில ஊர்மனைகளை தாக்கியது. முற்கூட்டியே மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவித்தமையால் உயிர் சேதங்கள் இல்லாவிட்டாலும் பாரிய பொருள் சேதங்களும் விவசாய செய்கைகளும் அன்றாட தொழில்களும் பூரணமாக பாதிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

இதேபோல் கடந்த 2025 நவம்பர் 25 தொடக்கம் 30 வரை ஏற்பட்ட கன மழை காரணமாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் குளங்கள் உடைப்பு எடுக்காவிட்டாலும் முற்கூட்டியே குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பாசிக்குடா வாழைச்சேனை உன்னிச்சை பட்டிப்பளை வெல்லாவெளி வவுணதீவு மைலாம்பாவெளி ஏறாவூர் மட்டக்களப்பு நகர் செங்கலடி கிரான் போன்ற பகுதிகளும் அம்பாறையில் பொத்துவில் திருக்கோவில் லகுகல பாணமை அம்பாறை அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை பாலமுனை நிந்தவூர் ஒலுவில் சம்மாந்துறை காரைதீவு கல்முனை நற்பிட்டிமுனை நாவிதன்வெளி மருதமுனை போன்ற பகுதிகளும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் இதுவரை பேரிடர் காரணமாக பலியானவர்களின் எண்ணிக்கை 607 ஆக அதிகரித்து 356 பேர் காணாமல் போய் உள்ளனர். 1 385 தற்காலிக முகாம்களில் 53 758 குடும்பங்களைச் சேர்ந்த 201 875 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த தொகை மேலும் அதிகரிக்கப்படலாம்.

இதன் விளைவாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சகல உள்ளூர் போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டு முழு நாடுமே சோகமயமாக்கப் பட்டுள்ளது.

• • •



# “டிற்வா” புயலும் மலையகத்தின் கண்ணீரும்:
## கடந்த கால அனர்த்தங்களிலிருந்து பாடங்கள்


மருதன் ராம்

இலங்கையின் மலையகப் பகுதிகள், அதன் அழகிய தேயிலைத் தோட்டங்கள் மற்றும் மலைப்பரப்புகளுக்குப் பெயர் பெற்றவை. எனினும், புவியியல் ரீதியாக, இந்தப் பகுதிகள் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய அபாய வலயங்களாகவே காணப்படுகின்றன. அண்மையில் நாட்டைத் தாக்கிய ‘டிட்வா’ புயல், மலையகத்தில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புயலால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் சேதங்கள், கடந்த காலங்களில் இதே பகுதிகளில் இடம் பெற்ற இயற்கை அனர்த்தங்களின் தீவிரத்துடன் ஒப்பிடுகையில் மிக மோசமான ஒன்றாக உள்ளது.



### டிட்வா புயலின் கோரத் தாண்டவம்

‘டிட்வா’ (Ditwa) புயல், இலங்கையின் அண்மைக் கால வரலாற்றில் 2004ஆம் ஆண்டு சுனாமிக்குப் பிறகு மிக மோசமான இயற்கை பேரழிவுகளில் ஒன்றாகப் பதிவாகியுள்ளது. மலையகத்தின் பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களில் இதன் தாக்கம் கற்பனை செய்ய முடியாத அளவில் பதிவாகியுள்ளது. புயல் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத மழைப்பொழிவு, ஆறுகளில் பாரிய வெள்ளப்பெருக்கையும், மலைப்பகுதிகளில் பாரிய நிலச்சரிவுகளையும் தூண்டியது.






சில பகுதிகளில் 24 மணி நேரத்திற்குள் 500 மில்லிமீட்டருக்கும் அதிகமான மழை பதிவானது. இந்த தீவிர மழைவீழ்ச்சி, மண்ணின் ஸ்திரத்தன்மையை முற்றாகப் பாதித்து, பல கிராமங்களை நிர்மூலமாக்கியது. சமீபத்திய தரவுகளின்படி, டிட்வா புயலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 486ஐத் தாண்டியுள்ளது, மேலும் 340க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.



குறிப்பாக, கண்டி மாவட்டத்தில் 118 உயிரிழப்புகளும் நுவரெலியா மாவட்டத்தில் 89 உயிரிழப்புகளும் பதுளை மாவட்டத்தில் 83 உயிரிழப்புகளும் கேகாலை மாவட்டத்தில் 30 உயிரிழப்புகளும் மாத்தளை மாவட்டத்தில் 28 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. அதேநேரம் கண்டி மாவட்டத்தில் 170 க்கும் மேற்பட்டோரும் நுவரெலியா மாவட்டத்தில் 70 க்கும் மேற்பட்டோர் கேகாலை மாவட்டத்தில் 40க்கும் மேற்பட்டோரும் காணாமல் போயுள்ளனர். அத்துடன் குறித்த மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் முழுமையாகவும் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. பல மாவட்டங்களில் பெருந்தோட்ட பகுதிகளில் காணப்பட்ட கிராமங்களுடனான தொடர்புகளும் துண்டிப்படைந்துள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் கணிசமான பகுதியினர், நிலப்பாதுகாப்பற்ற, செங்குத்தான சரிவுகளில் உள்ள தோட்டப் புறங்களில் வாழும் மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் வாழ்வாதாரம், வீடுகள் மற்றும் சமூகக் கட்டமைப்புகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டு, பல பகுதிகள் உலகிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டன.



### கடந்த கால அனர்த்தங்களின் பின்னணி

மலையகப் பகுதிகளில் இயற்கை அனர்த்தங்கள் என்பது புதிய விடயமல்ல. 1974ஆம் ஆண்டு முதல், இலங்கையின் காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட தீவிர மழைவீழ்ச்சி சம்பவங்கள் இந்தப் பகுதிகளைத் தொடர்ந்து தாக்கி வருகின்றன. குறிப்பாக, பருவமழை காலங்களில் ஏற்படும் நிலச்சரிவுகள் மற்றும் வெள்ளம் போன்றன பொதுவானவை.

உதாரணமாக 2016ஆம் ஆண்டு அரநாயக்க நிலச்சரிவை குறிப்பிட முடியும். கேகாலை மாவட்டத்தில் உள்ள அரநாயக்க மற்றும் புலத்கோஹுபிட்டிய ஆகிய இடங்களில் ஏற்பட்ட பாரிய நிலச்சரிவுகளில் 150க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். குறுகிய காலத்தில் பெய்த வரலாறு காணாத மழையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது.



அதேநேரம் 2017ஆம் ஆண்டு பல வெள்ளம் மற்றும் நிலச்சரிவு சம்பவங்கள் பதிவாகின இந்தப் பேரிடரில் 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன, 219 இறப்புகள் மற்றும் 74 பேர் காணாமல் போனதாக தரவுகள் உள்ளன. இதுவும் பிரதானமாக தென்மேற்கு பருவமழையினால் ஏற்பட்ட பாரிய மழைப்பொழிவின் விளை

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# களம் கண்ட கவிஞன்


புகழேந்தி தங்கராஜ்
திரைப்பட இயக்குனர்


புதுவை இரத்தினதுரை ஒரு பிறவிக் கவிஞன். புதுவையின் கவிதைகளில், கம்பனின் அழகும் இருந்தது. பாரதியின் சீற்றமும் இருந்தது. கண்ணதாசனின் எளிமையும் இருந்தது. அந்த முக்கவிகளின் சங்கமம், புதுவை.

*'முகிலிறங்கித் தவழும்*
*முலையென நிற்கிறது மலை'*

என்று வர்ணிக்கையில் கவிமேகம்.

*'இந்த மண் எங்களின் சொந்த மண்...*
*இதன் எல்லைகள் மீறி யார் வந்தவன்' -*

என்று கோபக்குரலாகஒலிக்கையில், புயல்வேகம்.

*'தாய் நிலத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்!'*

இது புதுவை நமக்கிட்ட கட்டளை.

*'நிலமிழந்து போனால்*
*பலமிழந்து போகும்;*
*பலமிழந்து போனால்*
*இனமழிந்து போகும்'*

என்கிற வரலாற்றுப் பாடத்தைச் சுட்டிக்காட்டியே கட்டளையிடுகிறது புதுவையின் தமிழ். கவிஞன் புதுவையை அறிந்த எனக்கு, அவரது கட்டுரை வன்மை தொடக்கத்தில் தெரிந்திருக்கவில்லை. 'வெளிச்சம்' அலுவலகத்துக்குச் சென்றிருந்த ஒரு மழைநாளில், அன்று காலை நாளிதழில் 'வியாசன்' என்பவர் எழுதியிருந்த கட்டுரை குறித்து சிலா கித்துப் பேசிக் கொண்டிருந்தேன். புதுவையிடமும் கருணாகரனிடமும்!

புதுவை முகத்தில் குறுநகை. கருணாகரன் தான் வெடித்துச் சிரித்தார். 'அது யாரென்று அண் ணனுக்குத் தெரியவில்லையா' என்று கேட்டார். தலையசைத்தேன். 'புதுவைதான் வியாசன்... அது இவரது புனைபெயர்' என்று கருணாகரன் சொன்ன போது, ஆடிப் போய்விட்டேன்.

அழகு தமிழிலும், ஆவேசத் தமிழிலும் கைநேர்ந்த புதுவைக்கு அங்கதத் தமிழும் கைவரப் பெற்றிருந்ததை என்னால் நம்பவே முடியவில்லை. புதுவையின் கைகளை எழுந்து நின்று நான் பற்றியதும், சடக்கென எழுந்த புதுவை தன்னுடைய இரும்புப் பிடியால் என்னை அன்போடணைத்ததும், மறக்க இயலாத உன்னதப் பொழுதுகள்.

களம் கண்ட கவிஞர்களின் அடையாள மாகவே திகழ்ந்த ஒரு கவிஞன்... குண்டுவீச்சு களுக்கிடையே நின்றபடி விடுதலைக் கானம் இசைத்த ஒரு போராளிக் கலைஞன்... என்னை அணைத்தது, நான் பெற்ற பேறு! எந்தவொரு விருதும், அதைக்காட்டிலும் பெறுமதியானதல்ல! புதுவையின் இரும் புப்பிடி அணைப்பை இப்போதும் உணர முடிகிறது என்னால்! அதை நினைத்து நினைத்து சிலிர்ப்பவன் நான்!

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் குழுமியிரு ந்த வேங்கைகளுக்கிடையே நின்று 'மானுடத் தின் தமிழ்க்கூடல்' நிகழ்வில் உரையாற்றியபோது, எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைத் தாண்டி பேசிக் கொண்டிருப்பதாகத் தோன்ற. ஒரு நொடி தடுமாறி விட்டேன். மேடையின் வலதுபுறத்திரைக்குப் பின் நின்று கொண்டிருந்த புதுவை 'நிறுத்த வேண்டாம். தொடருங்கள்' என்பதாக சைகை செய்ததையும், நான் பேசி

முடித்த பிறகு மீண்டும் தன் இரும்புப்பிடி அணைப்பால் அந்த மனிதன் என்னை நெகி ழச் செய்ததையும், எனக்குக் கிடைத்த பேரங்கீ காரமாகவே கருதுகிறேன்.

*2011* என்று நினைக்கிறேன். புதுவையும் நடேசனும் தோழர்களும் சரணடைந்த நொடிகளை, ஐயா பொன்.தியாகம் விவரிக்க கண்ணீரோடு கேட்டுக் கொண்டிருந்தேன். இப்போதும் 'காணாமலாக்கப்பட்டோர்' பட்டியலில்தான் இருக்கிறது புதுவையின் பெயர். ராணுவ முகாம் ஒன்றில் புதுவை இருப்பதாக சிங்கள 'திவயின' *2012*இல் செய்தி வெளியிட்டது. அதனை வேறெவராலும் உறுதி செய்ய முடியவில்லை.

*'என்னூரின் நாயுருவிப் பற்றையிடையே இலந்தை மரத்தின்*
*சிறுநிழலின் கீழ் படுத்தபடி*
*உயிர்நீக்கும் பாக்கியம் தா*

என்று வேண்டியவர் புதுவை. அந்த வேண்டுதல் நிராகரிக்கப்பட்டால், இறை சக்தி என்ற ஒன்றையே நாம் நிராகரிக்க வேண்டியிருக்கும்!

இன்றைக்கு சரியாக ஒருமாதம் முன், 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே என்று புதுவை தன் உயிரால் உருக்கி வார்த்த உன்னதக் கவிதையை - புதுவையின் கையெழுத்துப் படியை எனக்கு அனுப்பியிருந்தார் அன்புத் தோழர் நோர்வே ஸ்டீவன். கவித்துவமும் அமரத்துவமும் மிக்க அந்தப் பாடலின் கையெ ழுத்துப் படியில், பல இடங்களில் இசைச் குறிப் பையும் அந்தக் கலைஞன் எழுதியிருப்பதை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த மாமனிதன், விடுதலை வேங்கை மட்டு மல்ல... ஞாலம் உள்ளளவும் தமிழர் இதயத்தை இசையால் இழைக்கும் விடுதலைக் குயில்.




*'சா வரும் போதிலும் தணலிடை வேகிலும் சந்ததி தூங்காது எங்கள்*
*தாயகம் வரும் வரை, தாவிடும் புலிகளின்*
*தாகங்கள் தீராது'*

என்கிற புதுவையின் பிரகடனம், வட்டுக் கோட்டைப் பிரகடனத்தின் தொடர்ச்சி. புலியாய் இருப்பதிலும், புலியாய் இறப்பதிலும்தான் மையம் கொண்டிருக்கிறது தமிழீழ விடுதலைப் புயல். அதை ஓங்கி உரைத்த புதுவைக்குப் பிறந்த நாள் (டிசம்பர் 3) வாழ்த்துக்கள்.

• • •



# எமது நிலைப்பாட்டை ஈழத்தமிழ் இனம் கூட்டாக வலியுறுத்தவேண்டும்

வேல்ஸில் இருந்து **அருஸ்**

**அனைத்துலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அவுஸ்திரேலியா ஏதிலிகள் கழகம் ஏற்பாடு செய்ய நிகழ்வில் படைத்துறை ஆய்வாளர் அருஸ் ஆற்றிய உரையை இங்கு தரு கின்றோம்.**

இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் பேச்சாளர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், மக்களுக்கும் எனது வணக்கம்.

எதிர்வரும் 10 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் சபையினால் அறிவிக் கப்பட்ட உலக மனித உரிமை கள் தினம் அனுஸ்டிக்கப்படுகின் றது. மனித உரிமைகளுட னும் அடிப் படை உரிமைகளுடனும் ஒரு இனம் வாழ்வதை உறுதிப்படுத்தும் முகமாகவே இந்த நாள் நினைவு கூரப்படுகின்றது.

ஆனால் ஈழத்தமிழ் மக்கள் அதனை இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் அனுபவிக்க முடியாதவர்களாக மட்டு மல்லாது மனித உரிமை மீறல்கள் மற்றும் அடிப்படை உரிமை மீறல்க ளால் தொடர்ந்து பாதிக்கப்படும் ஒரு இனமாகவே உள்ளனர்.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற தித்வா புயல் அனர்த்தத் தின் போதும், இலங்கை அரசு வெளி யிட்ட மக்களுக்கான எச்சரிக்கை அறிவு றுத்தல்களில் தமிழ் மொழி புறக்கணிக் கப் பட்டதால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் அதிக பாதிப்புக்களை சந்தித்த தாக தெரிவிக்கப்படுகின்றது.




இனப்படுகொலை இடம் பெற்றுவரும் ஒரு நாட்டில் அங்கு ள்ள பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து கட்டமைக்கப்பட்ட ரீதியாக இனப்படு கொலைகளுக்கு முகம் கொடுத்து வருவதை இந்த சம்பவம் மட்டும் காண்பிக்கவில்லை, மாறாக கடந்த மாதம் தமிழர்களின் தலைநக ரான திருமலையில் சட்டவிரோதமாக இலங்கை அரசு அதன் காவல் துறையின் உதவியு டன் நிறுவப்பட்ட புத்தர் சிலையும் ஒரு உதாரணம். அதாவது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை தொடர்ந்து பலவந்தமாக ஆக்கிரமிப்பதன் மூலம் அவர்களின் பூர்வீக தாயத்தை சிதைத்துவிடுவதே இதன் நோக்கம்.

தமிழர் அடையாளத்தை அழித்து சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டு மென்று திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட காலாச்சார இனப்படுகொலையில் செயல்கள் அவை. 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின் போதும் அதற்கு முன்னரும் இலங்கை அரசு கடுமையான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது மட்டுமல்லாது, அது தொடர்பில் பல தீர்மானங்களும் நிறைவேற றப்பட்டிருந்தன. ஆனால் 16 வருடங்கள் கடந்த நிலையிலும் அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை.

அனைத்துலக மனித உரிமைகள் தினத்தின் இந்த ஆண்டின் கருப்பொருள் நமது அன்றாட அத்தியாவசியங்கள் என ஐ.நா தெரிவித்துள்ளது. அதன் அர்த்தம் என்னவெனில் மனித உரிமைகளின் மதிப்புகளை மீண்டும் உறுதிப்படுத்துவதையும் நாம் கவனிக்காத வழிகளில் கூட அவை நம் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு வடிமைக்கின் றன என்பதுமாகும்.

மனித உரிமைகளுடன் மீண்டும் இணை வதற்கான ஒரு வழியாகவும், அது அவர்களின் தேவைகள், விருப்பங்கள், அச்சங்கள் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பாகவே இந்த கருப் பொருள் உள்ளது என ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்தின் உயர் ஸ்தானிகர் வோல்கர் டார்க் இந்த தினம் தொடர்பில் கருத்து கூறும்பொது தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலும், அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியும் இன்னும் வழங்கப்படவில்லை. மேலும் இனப்படுகொலை எதிர்காலத் தில் தொடர முடியாதவாறு தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் மனித உரிமைகள் பாது காக்கப்படும் ஒரு தீர்வை வழங்கவும் ஐ.நாவோ அல்லது அனைத்துலக சமூகமோ முன் வரவில்லை.

இலங்கை அரசுகள் மேற் கொண்ட இனப்படுகொலைகளை விசாரணை செய்வதற்காக இலங் கையை ஐ.சி.சிக்கு பரிந்துரை செய்ய வேண்டும் அல்லது ருவாண்டா மற்றும் யூகோஸ் லாவாக்கியாவில் மேற்கொள்ளப்பட்டது போன்ற ஒரு தீர்ப்பாயத்தை நிறுவ வேண்டும் என தமிழ் மக்கள் தொடர்ந்து முன்வைத்த கோரிக்கைகளும் அனைத்துலக சமூகத் தினால் கருத்தில் எடுக்கப்படவில்லை.

இனப்படுகொலைக்கான ஐ.நாவின் பொறுப் புக்கூறல் செயல் முறை தடுப்பு, விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட பன்முக அணுகுமுறையை உள்ளடக்கியது. அதன் முக்கிய அம்சமாக இனப்படு கொலையில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. ஐ.நாவின் இந்த பொறுப்பு என்பது இனப்படுகொலையை தடுப்பதற்காக நாடுகளை வலியுறுத்துவதுடன், சர்வ தேச தலையீட்டையும் அனுமதிக்கின் றது.

மேலும் சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற விசாரணை அமைப்புக்களை நிறுவுதல் ஆகியவையும் அடங்கும். ஆதாரங்களை சேகரித்து இனப்படுகொலையை குற்றமாக்கி தண்டிக்கும் தேசிய முயற்சிகளையும் ஐ.நாவின் சரத்துக்கள் ஆதரிக்கின்றன.

அதாவது ஒரு இனப்படுகொலையின் ஆரம்ப புள்ளியாக மனித உரிமை மீறல்களே உள்ளன. அதனை நடைமுறைப்படுத்த கொண்டு வரப்பட்ட மனித உரிமைகள் தினம் என்பது உலகில் உள்ள பல்வேறு இன மக்களின் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதன் நோக்கத்தை கொண்டது. ஆனால் அதனை நிறைவேற்ற வேண்டும் என்றால் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனைகளும், அத னால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் ஏற் படுத்தப்படவேண்டும்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# தனித்துருவ இராஜதந்திரத்தின் காலம் முடிவுக்கு வருகிறது

தமிழில்: **ஜெயந்திரன்**

சட்டங்களைஅடித்தளமாகக்கொண்டஒருஉலக ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான இராஜதந்திரத்திற்குக் கொடுக்கப்படும் விலை என்ன என்பதை காஸாவில் உலகம் பார்த்திருக்கிறது. இந்த உலக ஒழுங்கில் எல்லோரும் சமமாகப் பார்க்கப்படுவதில்லை என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம், 'சட்டவிரோதமானது' என்று அறிவித்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த அமெரிக்கா தலையிட்டது. பல பல்தரப்பு நிறுவனங்களைக் கட்டியெழுப்பிய ஏனைய மேற்குலக நாடுகளோடு, அமெரிக்கா அந்தச் சட்ட ஒழுங்கைச் சீர்குலைக்கும் வகையில் தேசியவாத நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்து வருகிறது. வெளிவேடத்தன்மை இங்கே மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. உக்ரேனுக்கு ஒரு சட்டம். காஸாவுக்கு இன்னொரு சட்டம்.

தனித்துருவ அதிகாரக் கட்டமைப்பின் சரிவை அதன் மேலுள்ள நம்பிக்கைத்தன்மையின் வீழ்ச்சி சுட்டிக்காட்டுகிறது. தென் ஆபிரிக்காவில் கடந்த வாரம் நடைபெற்ற ஜி 20 மாநாட்டில் அமெரிக்கா பங்குபற்றாதது இதனைப் பிரதிபலித்தது.

**றாவா (Rafah) தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றம் தீர்ப்பிட்டிருக்கிறது. அடுத்து நடக்கப்போவது என்ன?**

"நீதியைச் செயற்படுத்துதல்: வாக்குறுதிகளைக் கடந்து முன்னேற்றப்பாதையில் செல்லல்" என்ற கருப்பொருளில் இவ்வாண்டுக்கான டோஹா மன்றத்தில் ஆயிரக்கணக்கானோர் எதிர்வரும் நாட்களில் கூட இருக்கின்ற பின்னணியில், இனப்படுகொலையைத் தடுப்பதில் ஏற்பட்ட தோல்விக்குப் பதில் சொல்லப்படவேண்டும். காஸாவில் தற்போது அமுல்நடத்தப்படும் போர் நிறுத்தம், பாலஸ்தீனமக்களுக்குப்பாதுகாப்பையும் கொடுக்கவில்லை. அரசியல் தீர்வையும் தரவில்லை. பாலஸ்தீனத்தின் பங்களிப்பு எதுவுமின்றி காஸாவின் எதிர்காலத்தைப் பற்றி இங்கே பேசப்படுகின்றது என்பது உற்றுநோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இது முற்றிலும் புதிய காட்சி என்று கூறிவிட முடியாது. பனிப்போர்க் காலத்தில் இருந்தே, 'மாஸ்டர் கீ' (Master Key) என்ற மாதிரியை அடிப்படையாகக் கொண்டே பன்னாட்டு இராஜதந்திரம் பின்பற்றப்பட்டு வருகிறது. இங்கே அரசியல் செயற்பாடுகள், பொருண்மிய அழுத்தம், நிபந்தனை அடிப்படையில் உதவி, போன்றவற்றைப் பயன்படுத்தி முரண்பாடுகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இதனைச் சுற்றி ஒரு சுற்றுச்சூழல் அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. மேற்குலக நாடுகளின் நிதியுதவியில் மனித நேய அமைப்புகள், சிந்தனைப்பள்ளிகள், மத்தியஸ்தர்கள், ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் என்று அனைத்தும் கட்டமைக்கப்பட்டு, எந்த நெருக்கடியும் வோஷிங்டனால் தீர்க்கப்படும் என்ற ஒரு நம்பிக்கை உருவாக்கப்படுகிறது.

இந்த மாஸ்டர் கீ யினால் இப்பொழுதும் பூட்டைத் திறக்கலாம் என்பதைக் காஸாப் போர்நிறுத்தம் சுட்டிக்காட்டுகிறது. அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தியது. ஒப்பந்தத்துக்கு ஏற்றாற் போல வேண்டியவற்றை வழங்க மனிதநேயச் சமூகம் முன்வந்தது. உதவி வழங்கலையும் மீள்கட்டுமானத்தையும் ஒருங்கிணைக்க அமெரிக்க இராணுவத்தால் குடிசார்-இராணுவ ஒருங்கிணைப்பு மையம் நிறுவப்பட்டிருக்கிறது.

குறைபாடுகள் நிறைந்த இந்த ஒப்பந்தத்துக்கு "பெரிய வெற்றி" என்று பல நாடுகள் புகழாரம் சூட்டியுள்ளன. இரண்டு ஆண்டுகள் நீடித்த முழுமையான அழிவுக்குப் பின்னர் ஒரு சட்டவிரோத ஆக்கிரமிப்பு தொடர்ந்து நிலைக்க அனுமதித்த மனிதநேய அமைப்புகளின் மட்டற்ற இராஜதந்திர முயற்சிகளுக்குப் பின்னரே இந்த மாஸ்டர் கீ பயன்படுத்தப்பட்டதைப் பார்க்கும் பொழுது, இந்த இராஜதந்திரத்தின் அறநெறித் தோல்வி தெளிவாகிறது. குடியேற்றக் காலனீய அணுகுமுறையைப் பின்பற்றும் தற்போதைய அமெரிக்க நிர்வாகத்தின் பரிவர்த்தனை அணுகுமுறையை இங்கே தெட்டத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.



பாசிசவாதிகளால் சிறைக்கைதியாக்கப்பட்ட அன்ரோனியோகிறாம்ஸி, 1930களில் எழுதிய, "இடைக்கால ஆட்சி" க்காலத்தை இப் போது நாங்கள் கடந்துகொண்டிருக்கிறோம். அதாவது பழைய உலகு மடிந்துகொண்டிருக்கிறது. புதிய உலகம் பிறப்பதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. அந்த வெறுமைக்குள் மீளவும் எழுகின்ற பாசிசத்தினதும் இன ரீதியான தேசியவாதத்தினதும் நோய் அறிகுறிகள் தென்படும்.

ஆகவே ஒரு வல்லரசு பூட்டைத் திறப்பதற்கு மறுத்தால் என்ன நடக்கும்? இங்கே உலகம் தனித்துருவமாக அல்ல, பல்துருவமாக மாறிவிட்டது. இங்கே எல்லாம் குழப்பமாக இருக்கிறது. ஆகவே தான் போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்புவர்கள் முற்றிலும் ஒரு புத்தம் புதிய அணுகுமுறையைக் கையாள நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

தனித்துருவ உலகம் மறைந்துகொண்டிருக்கிறது. 20ம் நூற்றாண்டுக்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள்காலாவதியாகப் போய்க்கொண்டிருக்கின்றன. மேற்குலக சக்திகள் பார்வையைத் தங்களை நோக்கித் திருப்பும் பொழுது, தங்களது இருப்பின் நியாயத்தன்மையை அந்த சக்திகளின் மேல் கண்டவர்கள் இப்போது நியாயத்தன்மையின் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இவ்வாறாக மாற்றத்திற்குள்ளாகியுள்ள உல கில், நிதி வழங்கும் நாடுகளின் அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டு, அதே வேளை பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையையும் இழந்து, ஐக்கிய நாடுகள் தனது செல்வாக்கைத் தக்க வைக்கப் போராடிக்கொண்டிருக்கின்றது. இருப்பினும், புதிதாக உருவாகும் சக்திகளுடன் தன்னை இணைத்து, பிராந்தியப் பங்காளிகளை அரவணைத்து, பன்னாட்டுச் சட்டத்தை எல்லோருக்கும் சமமாக அமுல்நடத்தக்கூடிய ஓர் புதிய வாய்ப்பை இது ஐக்கிய நாடுகளுக்கு வழங்கியிருக்கிறது. இவ்வாறான மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், பழைய உலக ஒழுங்குக்கும் புதிய உலக ஒழுங்குக்கும் இடையே இணைக்கும் பாலமாக ஐக்கிய நாடுகள் விளங்க முடியும். இவ்வாறான மாற்றங்களை அரவணைக்கத் தவறினால் அது இறப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறான மாற்றங்களுக்கு நடுவில், அர்த்தமுள்ள சமாதானத்தையும் பாதுகாப்பையும் தேடி புதிய புவியீர்ப்பு மையங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. டோஹாவில் ஒரு மத்தியஸ்த மையம் உருவாகியிருக்கிறது. பாரம்பரிய சக்திகள் தோற்றுப்போனஒரு சூழலில், தனதுதனித்துவமான அரசியல் நிலைப்பாட்டின் காரணமாகவும், இராஜதந்திர ஆற்றலின் காரணமாகவும் பேச்சு வார்த்தையை ஊக்குவிக்கக்கூடிய ஒரு சக்தியாக டோஹாமாறியிருக்கிறது. அனைத்துத்தரப்பினருடனும் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதனால், முரண்பாடுகளைத் தீர்க்கும் பூகோளக் கட்டமைப்பில் டோஹா இப்போது தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்திருக்கிறது. நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்திலும் ஹேக் குழுவிலும் தென் ஆபிரிக்கா தொடுத்துள்ள வழக்கு, சட்டபூர்வமான தன்மை இடம் மாறிக் கொண்டிருப்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. இந்த மாற்றம் இனப்படுகொலையின் அழிவின் மேல் கட்டப்பட்டது என்பது அவதானிக்கப்படவேண்டும்.

விரிவான கூட்டணிகள் மூலமும் ஆதிக்கம், கூட்டுத்தெரிவு போன்றவற்றிலிருந்து விடுபட்டு, பொறுப்புக்கூறலை மையமாகக் கொண்ட ஓர் புதிய அரசியல் சக்தி இதிலிருந்து உருவாக முடியும். டோஹா மன்றத்தின் மையப்பொருள் சுட்டுவது போல, நீதியைச் செயற்படுத்தி வாக்குறுதிகளைக் கடந்து முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல முடியும்.

இருப்பினும் காஸாவுக்கான அமெரிக்கா முன்வைத்த திட்டத்தை ஆதரித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை முன்மொழிந்த தீர்மானத்துக்குப் பெருமெடுப்பில் நாடுகள் வாக்களித்ததைப் பார்க்கும் போது, புதிய ஒழுங்கின் பலவீனம் தெளிவாகத் தெரிந்தது. பேச்சுவார்த்தைகளை அறிந்த இராஜதந்திரிகளின் கூற்றுப்படி, நாடுகள் அமெரிக்க அழுத்தத்துக்கு அடிபணிந்தன. காலனீயத்திலிருந்து மீளெழுகின்ற ஓர் இயக்கத்தில், பொருண்மிய நலன்கள் இன்னும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை இது உறுதிப்படுத்துகிறது. பல்துருவத்தன்மை நீதியை நிலைநாட்டும் என்பதற்கு உத்தரவாதமில்லை. அதன் பொருள் செல்வாக்கு வேறு சாராரைச் சென்றடைகின்றது என்பதாகும்.

இப்படியே தொடர்ந்து இருக்க வேண்டிய தேவை இல்லை. தனது சொந்தப் பூகோள அரசியற் கட்டமைப்பைக் கட்டமைத்து, தனது பேச்சுவார்த்தை மேசைகளை ஒழுங்குபடுத்தி தனது விதிமுறைகளைத் தானே தீர்மானிக்கும் ஒரு சக்தியாக தென் பூகோளம் விளங்க முடியும். படிப்படியாக ஓர் உறுதியான அமைப்பாக உருவாகும் பிரிக்ஸ் பொருண்மியக் கூட்டணி (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா) சில இலத்தீன் அமெரிக்க நாடுகள் கொண்டுள்ள இராஜதந்திரச் சுதந்திரம் போன்றவை தென் பூகோளத்தின் சாதகத் தன்மையைப் பறைசாற்றின. இதனை அலட்சியம் செய்வது எதிர்காலத்தையே அலட்சியம் செய்வதற்குச் சமன். பன்னாட்டு இராஜதந்திர செயன்முறைகளில் நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தி வரும் மேற்குத் தலை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

### டிற்வா புயல் ... தொடர்ச்சி ...

வருகின்றன. மக்கள் ஓரளவுக்கு பாதுகாப்பாக தற்போது இருக்கிறார்கள். இருந்தாலும் எதிர்வரும் 06,07,08,09 ம் திகதிகளில் கனமழை மலையகப் பகுதிகளில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களில் அம் மக்கள் இருப்பதுதான் சிறப்பானதாகும் என்றார்.

இவ்வாறாக இப் பேரிடர் மனித உயிர் சேதங்கள் மற்றும் சொத்து இழப்புக்களை ஏற்படுத்தியதோடு பல ஏக்கர் நெற் செய்கை பயிர்களையும் அழித்துள்ளது. விவசாய காப்புறுதி நிறுவனத்தின் அறிக்கையின் படி இலங்கையில் 273,000 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 20 மாவட்டங்களை சேர்ந்த 1,53,000 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சேத விபரங்களை 1918 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அனர்த்தம் காரணமாக சுமார் 03 மில்லியன் முட்டையிடும் கோழிகள் பலியாகியதாகவும் குறித்த அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். இதனால் எதிர்வரும் நாட்களில் கோழி முட்டைகளின் விலைகள் அதிகரிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது போன்ற சீரற்ற கால நிலை காரணமாக வெள்ள நீரில் மூழ்கிய வயல் நிலங்கள் பச்சை நிறமாக இருந்த நெற்பயிர்கள் தற்போது மஞ்சள் நிறத்தில் காட்சியளிப்பதுடன் அழுகிய நிலையில் காணப்படுகிறது.

திருகோணமலை தம்பலகாமம் கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட நெற் செய்கை விவசாய நிலங்களில் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் விவசாய சம்மேளன தலைவர் இலக்கு மின்னிதழுக்கு தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் தெரிவித்த அவர் விதைத்து ஓரிரு வாரங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாகவும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறந்ததனால் நெற் பயிர்ச் செய்கை அழிந்துள்ளது.

இது குறித்து விவசாயி ஒருவர், தம்பலகாமம் பிரதேச கரிக்கட்டை மலையாற்றுவெளி வயல் நிலப் பகுதியில் உள்ள சுமார் 573 ஏக்கர் வயல் நிலங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது. இது போன்று சம்மாந்துறை வெளியில் 200ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் சீரற்ற கால நிலையால் நெற் பயிர்ச் செய்கை மஞ்சள் நிறமாகவும் அழுகிய நிலையில் உள்ளது.

மீண்டும் நெற் செய்கைக்கு விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் தங்களது ஜீவனோபாயமாக விவசாய செய்கையே விளங்குகிறது எனவும் அழிந்து போன வயல் நிலங்களுக்கான நஷ்ட ஈடுகளை பெற்றுத்தருமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறான அனர்த்த நிலைமையின் போது ஏற்பட்ட இழப்புக்களை மீண்டும் சீர் செய்வதாக இருந்தால் பல மாதங்கள் கடக்கலாம். நாடு பொருளாதாரத்தில் இருந்து அநுர அரசாங்கம் வருகையின் பின் மீண்டு வருவதாக கூறப்பட்டாலும் இது போன்ற பேரிடரால் மீள்வது கடினமான விடயமாகும். அயல் நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வரும் நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசாங்கம் மூலமான நிவாரணப் பணிகள் இன்னும் இடம் பெறவில்லை என்பது மக்களின் குறைபாடாக காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களது வீடுகளை சுத்தம் செய்ய ரூபா 25,000.00 வழங்கப்படுவதாகவும் தகவல் சேகரிப்பு இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டாலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களும் சமூக அமைப்புக்களும், தனவந்தர்களுமே தற்போது வரை மூதூர், கிண்ணியா,வெருகல் போன்ற பகுதிகளில் தற்போது வரை உதவி செய்து வருகின்றார்கள். இது போன்ற கஷ்ட நிலைகளை கருத்திற் கொண்டு துரிதமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச தரப்பினால் நியாயமான நஷ்ட ஈடுகளை வழங்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •







### டிற்வா சூறாவளி . .. தொடர்ச்சி ...

ரூபா) ஆகியவை உள்ளடங்குகின்றன.

குறிப்பாக, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 246 வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீதியமைப்பில் உள்ள 22 பாலங்கள் சேதமடைந்துள்ளன. அதில், ஊவா மாகாணத்தில் 6 பாலங்களும், வடக்கு மாகாணத்தில் 4 பாலங்களும், வடமேற்கு மாகாணத்தில் 4 பாலங்களும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல், நாட்டின் 1593 கிலோமீற்றர் நீளமுள்ள புகையிரதப் பாதை அமைப்பில் தற்போது 478 கிலோமீற்றர் மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளது. விவசாய சேவைகள் துறைக்கு சொந்தமான 1,777 குளங்கள், 483 அணைகள் மற்றும் 1,37,265 ஏக்கர் விவசாய நிலம் அழிவடைந்துள்ள நிலையில், நாட்டின் தேசிய உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 84சதவீதமான பங்களிக்கும் மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், இதன் தாக்கம் நீண்ட காலத்திற்கு நீடிக்கும்.

உற்பத்தித் துறையும், விவசாயத் துறையும் பாதிக்கப்பட்டிருப்பதால், உள்நாட்டு நுகர்வும், ஏற்றுமதியும் வெகுவாகக் குறைவடையப்போகின்றது. இதனால் அந்நியச் செலாவணி வருமானம் குறைவதுடன், உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மரக்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய தவிர்க்க முடியாத சூழல்; ஏற்படப் போகின்றது.

இந்த நிலைமையானது அந்நியச் செலாவணி கையிருப்பை விரைவாகக் கரைத்துவிடும் ஆபத்தை தோற்றுவித்து வருகின்றது. மேலும், வருட இறுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும் காலகட்டத்தில் அனர்த்தம் நிகழ்ந்திருப்பது, அந்நியச் செலாவணி ஈட்டும் மற்றொரு முக்கியத் துறையைப் வெகுவாகப் பாதிக்கப்போகின்றது.

இந்தக் கட்டமைப்புகளை சீரமைக்கப் பெருமளவில் நிதியை ஒதுக்கீடு செய்ய முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதால், குறுகிய காலத்தில் இந்த அழிவுகளிலிருந்து மீள முடியாது என்பது தான் யதார்த்தமாகவுள்ளது.

ஆக, மொத்தத்தில் இலங்கை மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றது. இதற்கு வெளிநாடுகளின் பங்களிப்புக்களும், நிதி நிறுவனங்களின் நன்கொடைகளும் தாராளமாக போதும் என்று கருதினால் அது தான் ஆட்சியாளர்களின் முட்டாள் தனமாக அமையும்.

வெளிநாடுகளின் ஏட்டிக்குப்போட்டியான உதவிகளின் பின்னணியில் ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது. அது உலக நிதி நிறுவனங்களின் நன்கொடைகளுக்கும் பொருந்தும். அந்த நிகழ்ச்சி நிரலில் அநுர அரசு செயற்படுவதற்கு ஒருபோதும் தயாராக இருக்கப்போவதில்லை. அவ்வாறான நிலையில் புதிய இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயம் தான் என்ன?

• • •

## எமது நிலைப்பாட ... தொடர்ச்சி ...

தற்போது வடக்கில் அகழப்படும் செம்மணிப் புதைகுழிகள் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட நிகழ்வு அல்ல. அவை கறுப்பு ஜூலை முதல், முள்ளிவாய்க்கால் வரை நீடிக்கும் இனப்படுகொலைத் தொடரின் ஒரு பகுதியாகும், பல வந்தமாககாணாமல் போனவர்களின் தாய்மார்கள் 3,000 நாட்களுக்கும் மேலாக தங்கள் உறவினர்கள் எங்கே என்று கேட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். பதில்கள் இல்லை. மன்னிப்பு கோரல்கள் இல்லை. நீதியும் இல்லை.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு, ஐ.நா.வின் சொந்த உள் மதிப்பாய்வு (பெட்ரி அறிக்கை) தமிழர்களைப் பாதுகாப்பதில் "தனது தோல்வியை" ஒப்புக்கொண்டது. பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, அதே முறை மீண்டும் நிகழ்கிறது.

அதனை தடுத்து நிறுத்துவதற்கான நடைவடிக்கைகளை மேற்கொள்ளவோ அல்லது அதற்கு ஆதரவாக சர்வதேச நாடுகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு பொறிமுறையை கொண்ட ஒரு கட்டமைப்போ தமிழர்களிடம் இல்லை என்பதே எதிரிக்கு பலத்தை சேர்த்துள்ளது. பொறுப்புக்கூறல் என்பது அனைத்துலக சமூகமோ அல்லது ஐக்கிய நாடுகள்சபையோதன்னிட்சையாகசெய்வதில்லை. அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் ஒரு உந்தல் தேவை. வரலாறும் அதனை தான் எமக்கு எடுத்துச் சொல்கின்றது.

எனவே அந்த உந்துசக்தியை கொடுக்க உறுதியாக செயற்படும் ஈழத்தமிழ் அமைப்புக்கள் எதுவும் எம்மிடம் இல்லை என்பது தான் தமிழ் இனம் இன்று சந்தித்து நிற்கும் அவலநிலை.

ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை நிறுத்தவும், சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கவும், வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது குறித்த தகவல்களை வழங்கவும் இலங்கை அரசை நாம் இந்த நாளில் வலியுறுத்துகின்றோம். எங்களின் இந்த நிலைப்பாட்டை ஈழத்தமிழ் இனம் கூட்டாக வலியுறுத்தவேண்டும்.

அனைத்துலக மனித உரிமைகள் தினத்தில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களையும், உயிர்பிழைத்தவர்களையும் நாங்கள் நினைவில் கொள்கின்றோம். தமிழீழமும், இந்து சமுத்திரப் பிராந்தியமும், உலகமும் அந்த மக்களுக்கு ஆதரவாக ஒரு அணியில் திரள வேண்டியது இந்த நாளில் எமக்கு தேவையாக உள்ளது.

**நன்றி**

## ஆப்கானில் ... தொடர்ச்சி ...

அவற்றில் பெரும்பாலானவை திறமையின்மை மற்றும் சொத்துக் களை முறையற்ற முறையில் பயன் படுத்துவதன் மூலம் இழந்துள்ளன. மோசடி மொத்தத்தில் சுமார் 2% ஆகவும், 4% துஷ்பிரயோகம் ஆகவும் இருந்தது. வரி செலுத்துவோர் பணத்தில் $4.6 பில்லியனுக்கும் அதிகமான தொகையைச் சேமிக்க முடியும் என்று கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஜனநாயகத்தை உரு வாக்குவதற்கான 20 ஆண்டுகால நோக்கம் அமெரிக்காவின் முயற்சிகள் தோல்வியடைந்திருந்தது. 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு 2001 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. இந்த தாக்குதலுக்கு அல்கைடா பொறுப்பு என வாஷிங்டன் குற்றம் சுமத்தியிருந்தது.

2021 வரை, அமெரிக்கா போருக்கு $763 பில்லியனையும். மறுகட்டமைப்புக்கு கிட்டத்தட்ட $145 பில்லியனையும் செலவிட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஜூலை 2021 இல் அமெரிக்கப் படைகள் அவசரமாக பின்வாங்கியதால், மேற்கத்திய ஆதரவு அரசாங்கம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன்பின்னர் தலிபான்கள் காபூலை மீண்டும் கைப்பற்றியிருந்தனர்.

## இந்தியாவில் பூட் ... தொடர்ச்சி ...

தலைநகரம் இந்த பிராண்டிற்கான காட்சி ஓடு பாதையாகவும், ரஷ்யா-இந்தியா நட்பின் காட்சிப் பொருளாகவும் மாறியுள்ளது. ரஸ்ய ருடே ஊடக த்தை அமெரிக்கா உட்பட நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் தடைசெய்துள்ள நிலையில் அதன் தொலைக்காட்சி சேவை இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவுடன், பாதுகாப்பு மற்றும் வர்த்தக உடன்பாடுகளையும் பூட்டீனும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் மேற்கொண்டுள்ளனர். எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் 100 பில்லியன் டொலர்களை எட்டும் எனவும், இந்தியாவுக்கு மேலதிக எஸ்-400 ஏவுகணை தொகுதிகள் மற்றும் ஐந்தாம் தலைமுறை தாக்குதல் விமானமான எஸ்.யூ-57 ஆகியவற்றை வழங்குவதற்கு ரஸ்யா முன்வந்துள்ளது.

மேலும் இந்தியா ஒரு காலனி அல்ல; மோடி அழுத்தத்திற்குப் பணிய மாட்டார்' என விளாடிமிர் புடின் 'இந்தியா டுடே'க்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில், தெரிவித்துள்ளார்.

இந்தியாவை 77 ஆண்டுகளுக்கு முன்பு பேசியதைப் போல இப்போது பேச முடியாது. இந்தியா ஒரு மகத்தான சக்தி. ஆங்கிலேய காலனி அல்ல. இதை அனைவரும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பிரதமர் மோடி, அழுத்தத்திற்குப் பணியக்கூடியவர் அல்ல. இந்திய தேசம் தங்கள் பிரதமரை நினைத்துப் பெருமை கொள்ளலாம். நானும் பிரதமர் மோடியும் ஒரு போதும் யாருக்கும் எதிராகச் செயல்பட ஒத்துழைத்ததில்லை. எங்கள் நடவடிக்கைகளால் யாருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை என்பதை மற்ற நாட்டுத் தலைவர்கள் பாராட்ட வேண்டும்.

அமெரிக்காவே எங்களது அணுசக்தி நிலையங்களுக்கு எங்களிடமிருந்து எரி பொருளை வாங்கும்போது, அதே சலுகை ஏன் இந்தியாவிற்கு இருக்கக் கூடாது?" இந்தியாவுடனான ரஷ்யாவின் 90% க்கும் அதிகமான வர்த்தக பரிவர்த்தனைகள், உள்நாட்டு நாணயங்களிலேயே (ரூபாய் மற்றும் ரூபிள்) நடைபெறுகிறது.

"நாங்கள் வெறும் தொழில்நுட்பத்தை இந்தியா விற்கு விற்பது மட்டுமல்ல, அதைப் பகிரவும் செய்கிறோம். இது மிகவும் அரிதான விஷயம். கப்பல் கட்டுமானம், ராக்கெட் மற்றும் ஏவுகணைப் பொறியியல், விமானப் பொறியியல் உட்பட எங்களுக்கு விரிவான துறைகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தனித்துருவ ... தொடர்ச்சி ...

நகரங்களுக்குச் சவால்விட்டு, 2025 ஆகஸ்டில், பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெற்ற பொழுது, உறுப்பு நாடுகள் பல்துருவ உலக ஒழுங்கை உருவாக்குவதற்கான அழுத்தத்தைக் கொடுத்தன.

இராஜதந்திரத்தைப் பொறுத்தவரையில், அது நாடுகளால் முன்னெடுக்கப்பட்டாலோ அல்லது பல்தரப்பு நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டாலோ அல்லது அவர்களை ஆதரிப்பவர்களால் முன்னெடுக்கப்பட்டாலோ இந்த மாஸ்டர் கீ என்ற மாதிரியிலிருந்து அது வெளிவர வேண்டும். கருத்து ரீதியான நேர்மையிலும், நடைமுறைச் செயற்பாடுகளிலுமே அது கட்டியெழுப்பப்படவேண்டும். இதன் பொருள் என்னவென்றால், முழு இயக்கங்களைப் பயங்கரவாதி எனப் பெயரிடுவதை விடுத்து, வித்தியாசமான சக்திக் கட்டமைப்புகளின் நியாயத்தை ஏற்று, நவீன முரண்பாடுகளின் சமச்சீரற்ற தன்மையை எதிர்கொள்ள வேண்டும். நடைமுறை ரீதியிலான செயற்பாடுகள் என்று பேசும் பொழுது பல் கதவுப் பேச்சுவார்த்தையையும், பிராந்தியக் கூட்டணிகள், ஆயுதக் குழுக்கள், சிவில் இயக்கங்கள் போன்று அதிகாரத்தை உண்மையிலேயே கொண்டிருக்கும் நபர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு தனிச் சாவியை மற்றும் பற்றிப் பிடிப்பவர்கள் தனியே விடப்படுவார்கள். தனித்துருவ ஒழுங்கில் துன்பங்களை அனுபவித்த பாலஸ்தீனர்களும் ஏனையோரும் அவர்களை விட்டுச் செல்வதால் வருந்த மாட்டார்கள். பல சாவிகளை வைத்திருப்பவர்களுக்கும் எந்தக் கதவை எப்போது திறக்கலாம் அறிந்திருப்போருக்கும் மட்டுமே அமைதிப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் சொந்தமாகும். மாஸ்டர் கீ இன் காலம் தற்போது முடிவுக்கு வருகிறது.

**நன்றி: aljazeera.com**

## யூரோவிஷனை . .. தொடர்ச்சி ...

யிருந்தது.

அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய போர் நிறுத்தம், மோதல்களை இடைநிறுத்தி, மனிதாபிமான உதவிகளை அந்த பகுதிக்குள் அனுமதிக்கும் நோக்கம் கொண்டது, ஆனால் அது நடைமுறைப்படுத்தப்பட்டதில் இருந்து இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இதுவரையில் 366 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

EBU கடுமையான வாக்களிப்பு விதிகளை மேற்கொண்ட பின்னர் வியாழக்கிழமை(4) முடிவை அறிவித்துள்ளது. இஸ்ரேலிய போட்டியாளரை ஊக்குவிக்க 2025 போட்டி கையாளப்பட்டதாக பல ஐரோப்பிய ஒளிபரப்பாளர்கள் கூறியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மனிதநேயம், பத்திரிகை சுதந்திரம் போன்ற உலகளாவிய விதிகளின் மீறல் மேலும் யூரோவிஷன் பாடல் போட்டியின் முந்தைய பதிப்பின் போது ஏற்பட்ட அரசியல் தலையீடு, எங்களுக்கு ஒரு வரைமுறையை விதித்திருந்தது என நெதர்லாந்து தெரிவித்துள்ளது.

காசாவில் ஏற்பட்ட பயங்கரமான உயிர் இழப்பு மனிதாபிமான நெருக்கடி மற்றும் பத்திரிகை சுதந்திரத்தின் மீதான இஸ்ரேலின் அடக்குமுறை ஆகியவை அதன் விலகலுக்கும் நிகழ்வை ஒளிபரப்ப வேண்டாம் என்ற முடிவுக்கும் காரணங்கள் என அயர்லாந்து தெரிவித்துள்ளது. காசாவில் பாலஸ்தீனியர்களின் இனப்படுகொலைக்கு காரணமான ஒரு நாட்டின் பிரதிநிதியுடன் நாங்கள் ஒரே மேடையில் நிற்க முடியாது" என ஸ்லோவேனியா தெரிவித்துள்ளது.

## குருதிஷ் மக்கள் . .. தொடர்ச்சி ...

ஆகாயத்திற்கு சொந்தமாக்கிவிட்டு தமக்கான கௌட்டைகளுக்கு தரையில் அத்திவாரம் இடப் பிக்கான்களையும் மண்வெட்டிகளையும் கையில் எடுத்தார்கள்.

தொடரும்...

**“டிட்வா” புயலும். .. தொடர்ச்சி ...**

வாகும். எவ்வாறினும் மேற்கூறிய குறித்த அனர்த்தங்களுடன் ஒப்பிடும்போது டிட்வா புயல் பாரிய அளவில் வேறுபட்டு காணப்படுகிறது. டிட்வா புயலின் தாக்கத்தை கடந்த கால நிகழ்வுகளுடன் ஒப்பிடும்போது சில முக்கிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உயிரிழப்புகளின் எண்ணிக்கையை நோக்கும் போது டிட்வா புயலினால் ஏற்பட்ட தற்போதைய உயிரிழப்பு எண்ணிக்கையான 486 என்பது, 2016 அல்லது 2017ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தனித்தனி அனர்த்தங்களின் மொத்த உயிரிழப்புக்களை விட மிக அதிகமாக உள்ளது. அதேபோன்று மழைப்பொழிவு தீவிரம் தன்மையை நோக்கும் போது டிட்வா புயலின் போது சில இடங்களில் பதிவான மழைப்பொழிவு அளவான 540 மில்லிமீற்றர் என்பது, முந்தைய பல சம்பவங்களில் சராசரி மழைவீழ்ச்சி அளவை விட மிக அதிகமாகும். அதேபோன்று கடந்த கால அனர்த்தங்கள் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில், டிட்வா புயல் 22 மாவட்டங்களைப் பாதித்துள்ளது.

இது ஒரு பரவலான தேசிய நெருக்கடியை எடுத்து காட்டுகிறது. வரலாற்று ரீதியாக, மலையகப் பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்ட குடியிருப்புகள், நிலப்பாதுகாப்பற்ற சரிவுகளில் அமைந்துள்ளதால், ஒவ்வொரு தீவிர மழைப்பொழிவின் போதும் அதிக ஆபத்துக்கு உள்ளாகின்றன. இந்த கட்டமைப்பு ரீதியான பாதிப்பு, டிட்வா புயலின் போதான பேரழிவின் தீவிரத்தை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

**அரசாங்கத்தின் உடனடி செயற்பாடுகள்**

டிட்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுசெய்ய இலங்கை அரசாங்கம் பல அவசர மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதில் உடனடி நிவாரணம் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவை அடங்குகின்றன.



புயலால் ஏற்பட்ட பாரிய அனர்த்தங்களை எதிர்கொள்ள அரசாங்கம் அவசரகால நிலையை அறிவித்துள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 550 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் புயலால் ஏற்பட்ட பெரும் சேதங்களுக்குப் பிறகு நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கத்துடன், “Rebuilding Sri Lanka” என்ற பெயரில் ஒரு நிதியத்தை நிறுவ அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்க்கையை நிலைப்படுத்தத் தேவையான அவசர நிவார ணம் மற்றும் அத்தியாவசிய வசதிகளை வழங்குவது குறித்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு திறைசேரி செயலாளரின் அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இதேவேளை, அரசாங்கம் சர்வதேச உதவிகளையும் நாடியுள்ளது. இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், மாலைத்தீவு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற நாடுகள் மற்றும் அமைப்புகள் உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள், நீர் சுத்திகரிப்பு கருவிகள் மற்றும் நிதி உதவிகளை வழங்கியுள்ளன. அனர்த்த நிவாரணத்திற்கான தேவையான கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பிரதம செயலாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணிக ளுக்கு முன்னுரிமை அளித்து, முக்கிய அமைச் சர்களின் பங்கு பெற்றதுடன் உயர்மட்டக் குழுவை அரசாங்கம் நிறுவியுள்ளது. எவ் வாறாயினும் அரசாங்கத்தின் செயல்பாடுகள் மீதும் பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக இவ்வாறானதொரு புயல் தாக்கம் ஏற்படும் என முன்கூட்டியே வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அதற்கேற்ப முன்னாயத்த நடவடிக்கைகள் எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன. 500 மில்லிமீட்டருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என்ற எதிர்வுகூறல் காணப்பட்ட நிலையில் முன்கூட்டிய செயற்பாடாக நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளை திறப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாகவும் திடீரென வான்கதவுகளை திறந்து விட்டதன் காரணமாக மலையகத்தின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு சம்பவங்கள் ஏற்பட்டதாகவும் எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.


அதேபோன்று பாதிக்கப்பட்டோரின் தரவுகளை சேகரிப்பதற்காக கிராம உத்தியோ கத்தர் மட்டத்தில் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. இதன்படி அனர்த்த நிவாரணங்களுக்காக ஒவ்வொரு கிராம உத்தியோகத் தருக்கும் ஒரு தொகை நிதி வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் 150 முதல் 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் உள்ள நிலையில் மலையகப் பகுதிகளில் 3000 குடும்பங்களுக்கு ஒரு கிராம உத்தியோத்தர் என்ற நிலையே காணப்படுகிறது. அப்படியாயின் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நிவாரணங்களை வழங்குவதில் பாரிய பாரபட்சம் ஏற்படும். இந்த அடிப்படையில் டிட்வா புயல், இலங்கையின் மலையகப் பகுதிகளின் சுற்றுச்சூழல் ரீதியான பாதிப்புக்குள்ளாகும் தன்மையையும், காலநிலை மாற்றத்தின் கடுமையான விளைவுகளையும் கண்முன்னே நிறுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் இருந்து போதுமான பாடங்களைக் கற்று, நிலப்பாதுகாப்பு, ஆரம்ப எச்சரிக்கை பொறிமுறைகள் மற்றும் பாதுகாப்பான மீள்குடியேற்றத் திட்டங்களை அரசாங்கம் உடனடியாகச் செயல்படுத்தா விட்டால், எதிர்காலத்திலும் இதுபோன்ற நெருக்கடி நிலைக்கு நாடு மீண்டும் மீண்டும் ஆளாக நேரிடும். இந்த அனர்த்தம், மலையக மக்களின் பாதுகாப்பற்ற வாழ்விடப் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டிய அவசரத் தேவையை வலியுறுத்துகிறது”

• • •








இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்





